07 APR 1998
03 APR 1998

பக்கங்கள் 12

# காலைக்கதிர்

விலை ரூபா 8/-

KAALAIKATHIR — வாரவெளியீடு

ஒளி 01 திருவள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 13 மார்ச் 27 — ஏப்ரல் 03 1998 கதிர் : 04

# குடாநாட்டில் மீளக்குடியமர முஸ்லிம் மக்கள் நடவடிக்கை!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குடியேறுவது தொடர்பாக முஸ்லிம் மக்கள் மத்தியில் ஆர்வம் அதிகரித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. குடாநாட்டில் மீளக்குடியமர்வது தொடர்பாக விடுதலைப் புலிகளிடமிருந்து மீண்டும் வெளியேற்றப்பட மாட்டோம் என்ற உத்தரவாதத்தைப் பெறுவதற்கு குடாநாட்டில் வாழ்ந்த முஸ்லிம் சமூகப் பிரமுகர்கள் சிலர் முயற்சி மேற்கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. இதே வேளை குடாநாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீளக் குடியமர்த்த அரசாங்கமும் தீவிர ஆர்வம் காட்டி வருவதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாடு சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுபாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து இங்கு மீளக் குடியேறுவது தொடர்பாக முஸ்லிம் மக்கள் பல வித முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த மக்கள் சமூகத்தைச் சேர்ந்த வர்த்தக பிரமுகர்கள் சிலர் நேரடியாக வந்து வடபகுதி நிலைவரங்களைப் பார்வையிட்டுத் திரும்பியதுடன் சிலர், ஏற்கனவே தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்து இருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை தமிழ் மக்கள் மத்தியில் செயற்படும் ஈ பி ஆர் எல்,எப், ஈ.பி.டி.பி போன்ற அரசியல் கட்சிகளும் முஸ்லிம் மக்கள் மீண்டும் குடாநாட்டுக்கு திரும்பி வந்து குடியேறுவதற்கு வரவேற்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை குடா நாட்டில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் மீண்டும் குடியமர்த்தப்பட வேண்டுமென்பதில் அரசாங்கமும் தீவிர ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிய வருகிறது அண்மையில் கண்டி குயின்ஸ் ஹோட்டலில் செய்தியாளர்களிடம பேசிய உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா வடபகுதி முஸ்லிம்கள் மீளக் குடியமர்த்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி உறுப்பினர் இவ்வாரம் பதவியேற்கலாம்

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் (ஈ.பி.டி.பி) இந்த வாரத்தில் சத்தியப் பிரமாணஞ் செய்து பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாக உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா கூறியுள்ளார்.

## யாழ் நகரில் கைக்குண்டு வீச்சு

யாழ்ப்பாண நகரத்திலுள்ள நவீன சந்தைப் பகுதியில் வியாழனன்று நண்பகலில் கைக்குண்டு வீச்சு சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் பரமசாமி பூற்ரோன், (22 வயது) அரியாலை, சி.சிவலிங்கம்(58) ஆகியோர் காயமடைந்துள்ளனர். இச் சம்பவத்தையடுத்து இப் பகுதியில் சிறிது நேரம் பதட்டம் நிலவியது.

## இலங்கை இனப்பிரச்சினை தீர்வு இந்தியா தொடர்ந்து உதவும்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அமைதியான வழியில் அரசியல் தீர்வு காண்பதற்கு இந்தியா தொடர்ந்து உதவும்.

இவ்வாறு இந்தியாவின் புதிய பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் கூறியுள்ளார், அண்மையில் புதுடில்லி சென்றிருந்த சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவின் புதிய பிரதமரை உத்தியோகபூர்வமாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார் என்பது தெரிந்ததே.

அப்போது கருத்து தெரிவித்த இந்தியாவின் புதிய பிரதமர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையின் பிராந்திய ஒருமைப் பாட்டிற்கும் ஒத்துழைப்பிற்குமாக தீர்வு காணப்படுவதையே இந்தியா விரும்புகின்றது. தென்னாசியப் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு (சார்ச்) வாயிலாக இரு தரப்புக்களுக்கும் இடையிலான உறவு மேலும் வலுப்படுத்தவும், ஒத்துழைப்புப் பேணப்படும் எனவும் தெரிவித்தார். (ரி)

## தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழ்க் கட்சிகள் தயாராகின்றன

வடக்கு கிழக்கு மாகாண சபைக்காக நடத்தப்படலாமென எதிர்பார்க்கப்படும் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழ் அரசியல் கட்சிகள் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருந்தால் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராக இருப்பதாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் ஏற்கனவே தெரிவித்துள்ளன.

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ் மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா இதுபற்றிக் குறிப்பிடுகையில் மக்களுக்கு இன்னும் சிறப்பாக பணியாற்ற நாம் நிச்சயம் மாகாண முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடுவோம் என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியற் குழு இதுபற்றி இந்தவாரத்தில் கொழும்பில் கூடி ஆராயுமெனக் கூறப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

அன்பார்ந்த வாசகர்களே!

சென்ற வார காலைக் கதிர் தவிர்க்க முடியாத காரணங்களினால் வெளி வர முடியாமற் போய் விட்டது. இந்த வாரம் முதல் காலைக்கதிர் வார இதழ் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் உங்கள் கரங்களில் தவழும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆ - ர்

## இரத்தம் தோய்ந்த சாலையாக வன்னி நெடுஞ்சாலை மாறியுள்ளது

— புலிகளின் தளபதி கருணா

(யாழ்ப்பாணம்)

வன்னி நெடுஞ்சாலை புலிப் போராளிகளின் ரத்தம் தோய்ந்த சாலையாக மாறியுள்ளது. இவ்வாறு விடுதலைப்புலிகளின் மூத்ததளபதிகளில் ஒருவரான கருணா தெரிவித்துள்ளார். ஒளிவீச்சு என்னும் வீடியோ சஞ்சிகைக்கு பேட்டியளித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்;

ஜெயசிக்குறு ராணுவ நடவடிக்கையைப் பொறுத்த வரையில், இது அரசாங்கத்தால் திட்டமிட்டு மேற்கொள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் உற்பத்தியில் ஈடுபட ஊக்குவிப்பு வழங்க வேண்டும்.

—கலாநிதி என். சண்முகரட்ணம

மக்கள் உற்பத்தியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில் வசதிகள் அளிக்கப்பட வேண்டும். ஆனால் இங்கு எல்லாம் மறுதலையாக உள்ளது. மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குச் செல்வதில் கட்டுப்பாடு; விவசாயிகள் செய்கையில் ஈடுபடுவதற்கும் கட்டுப்பாடு; சுருக்கமாகச் சொன்னால் அரசியலுரிமைகளை விடவும் அன்றாடத் தொழில்களை மேற்கொள்வதில் இருக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றவாளிகளை விசாரிக்கும் அதிகாரம் யாருக்கு?

— யாழ் நீதிவான் கேள்வி

(யாழ்ப்பாணம்)

குற்றம் செய்ததாகக் கருதப்படுபவர்களை விசாரிக்கும் அதிகாரம் யாருக்கு இருக்கிறது? அது பற்றிய சட்ட ஏற்பாடுகள் உங்களுக்குத் தெரியுமா?

யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் ஏ.ஈ.ஏகநாதன் ஈழமக்கள் ஜனநாயக்கட்சி உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்ட வழக்கொன்றில் இவ்வாறு கேள்வி எழுப்பி

(12 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளதை உள்ளபடி ஊருக்கு எடுத்துரைக்கும் வார இதழ்

# புங்குடுதீவின் இன்றைய கல்விநிலை உப்பாய்க் கசக்கும் உண்மை

— கதிரோன்

பண்ணைக் கடலுக்கு ஊடாக மிதந்து செல்லும் தார் வீதி மடத்துவெளியை அடைந்ததும் நிம்மதிப் பெருமூச்சு நீளும். குறிகாட்டுவான் இறங்குதுறை வரை செல்லும் வீதியின் இருமருங்கிலும் முன்னொரு காலத்தில் குடியிருப்புக்கள் இருந்தமைக்கான தடயங்கள் நிறைந்து கிடக்கிறது. சாதாரண மக்களின் நடமாட்டத்தைக் காண்பது அரிதாகவே கிடக்கின்றது.

பேருக்கு நான்கு இத்தி மரங்கள் உயர்ந்து நிற்கும் பெருங்காட்டுச் சந்தியை அண்மித்தால் ஜீனுள்ளமனிதர்களின் நடமாட்டம் தென்படும். யாழ்ப்பாண நகரத்திலிருந்து செல்லும் பேருந்துகளின் வருகையும் பிரிவும் தான் வாழ்வியக்கத்தைத் நிர்யாணிக்கும் செயற்பாடு. பேருந்து வண்டியின் வருகை நேரம், பயணிப்பவர் என்பனவெல்லாம் காவலரண்களின் கண்காணிப்பில.

இருந்த போதும் பாடசாலைகளும் ப. நோ. கூ. சங்கங்களும், வைத்தியசாலையும், செயற்படுகின்றன என்று தான் சொல்லப்படுகிறது. அரசாங்க சுற்று நிருபங்களின்படி அலுவலக நேரம் காலை 9.00 முதல் பிற்பகல் 4.45 வரை என்பதற்கு இங்கு விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது போலும். யாழ்நகர பேருந்தின் வருகை நேரத்தில் ஆரம்பித்து பிரிவுக்கு முன்பாக முடிவுக்கு வந்துவிடும் அலுவலக மற்றும் பாடசாலை நேரங்கள், அதிபர், ஆசிரியர்களின் வரவு இல்லாமலேயே பாடசாலைகள் செயற்படும் அதிசயம் அடிக்கடி இடம் பெறும். புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் கனிஷ்ட வித்தியாலயம் இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகத் தெரிய வருகிறது. 'பஸ் வந்தால் தான் எங்களுக்கு படிப்பு நடக்கும்' என்று சர்வ சாதாரணமாகத் தெரிவித்தார் க. பொ. த. (சா/த) வகுப்பில் பயிலும் ஒரு மாணவி, சுமார் ஆறு ஆண்டு கால இடப்பெயர்வு வாழ்க்கையினால் வேர் ஒரு இடமும் விழுது ஒரு இடமுமாக, பிளவுபட்டு நிற்கிறார்கள். எமது மக்கள் என்பதற்கு இங்கு கடமையாற்றும் ஒவ்வொருவரின் தனிப்பட்ட கதைகளும் நல்ல எடுத்துக்காட்டு எனலாம்.

கல்வித்திணைக்களம் வேறு ஆங்கில ஆசிரியர்கள் எவரும் இப்பகுதிக்கு இன்னமும் நியமிக்கப்படவில்லை. நியமிக்கப்படுவர்கள் கடமை ஏற்க இப்பகுதிக்கு சென்று வருவதைகூட கஷ்டமாகக் கருதும் காலம் காலடிக்குள்ளேயே கடமையாற்றும் அலுவலகம் இருக்க

(12ம் பக்கம் பார்க்க)

## உங்கள் வார்த்தைகள்

உங்கள் வார்த்தைகள் உங்கள் வார்த்தைகள் உங்கள் வார்த்தைகள்
உங்கள் வார்த்தைகள் உங்கள் வார்த்தைகள் உங்கள் வார்த்தைகள்
உங்கள் வார்த்தைகள் உங்கள் வார்த்தைகள் உங்கள் வார்த்தைகள்
உங்கள் வார்த்தைகள் உங்கள் வார்த்தைகள் உங்கள் வார்த்தைகள்
உங்கள் வார்த்தைகள் உங்கள் வார்த்தைகள் உங்கள் வார்த்தைகள்

- காலைக்கதிரின் சேவையில் தமிழ்மொழி வளம் பெறவும், இலங்கைத் தமிழர்களுக்கு விடிவுகாலம் ஏற்படவும் இறைவனை அருள் புரியவும் காலப் போக்கில் விடயதானம் செய்யவும் சித்தமாயுள்ளேன்.

  — அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை யாழ்ப்பாணம்

- காலைக்கதிரின் வரவு கண்டேன். மகிழ்ச்சி

  — குணேஸ்வரன், தொண்டமனாறு.

- காலைக்கதிர் கிடைத்தது மகிழ்ச்சி

  — ஐ. சாந்தன், சுதுமலை.

- காலைக்கதிர் வார இதழ் சிறக்க எனது வாழ்த்துக்கள்

  — தெணியான் வல்வெட்டித்துறை.

- உங்கள் முயற்சிக்கு வாழ்த்துக்கள் உரியதாகும்

  — என். குலசிங்கம், பருத்தித்துறை.

- உங்கள் முயற்சிக்கு மனம் திறந்த பாராட்டுகள்

  — சி. சிவபாதம் பருத்தித்துறை.

- காலைக்கதிரெனும் தமிழ் மகள் வந்தாள் தமிழினத்தின் துன்பங்கள போக்க வழியல சொல்வான் என்றே நம்புகிறேன்

  — லிங்கேஷ், உரும்பராய்.

# அம்பலத்தரங்கம்

— ஊடுருவி



☐ அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல அரச திணைக்களமொன்றில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. இப் பரீட்சையில், பரீட்சார்த்தி ஒருவரின் சான்றிதழ்களை ஒவ்வொன்றாகப் பரிசீலித்தார் உயரதிகாரி ஒருவர். ஒரு நற்சான்றுப் பத்திரம் அவர் மனதைப் பிடித்தது. தனியே எடுத்துப் பார்த்தார். "இது றெக்ரர் தந்தது" என்றார் பரீட்சார்த்தி. "என்ன ஐசே றெக்ரர், டிறைக்ரர் என்று வடிவாச் சொல்லும்" என்றார் அவ் உயரதிகாரி; சினம் ததும்ப. பரீட்சார்த்திக்கு முழி பிதுங்கியது. "நோ...நோ, கிறிஸ்ரியன் ஸ்கூலில் அதிபர்கள் றெக்ரர் என அழைப்பது வழக்கம்' என்றார் அருகிலிருந்த மற்றோர் அதிகாரி. பரீட்சார்த்திக்கு வியர்க்கவும் தொடங்கி விட்டது!

☐ அண்மையில் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான சந்திப்பு யாழில் இடம் பெற்றது. இச் சந்திப்பில் உரையாற்றிய அரச அதிகாரி, 'இன்றைய மாணவர்களுக்கு தங்கள் மீது நம்பிக்கை இல்லை, ஏனெனில் கஷ்டப்பட்டு படித்தாலும் அதற்குரிய பயன் கிட்டுமா என்பது சந்தேகமாகவுள்ளது. பெற்றோர்களுக்கோ பிள்ளைகளுக்கு எதிர்காலத்தின் மீது நம்பிக்கை யூட்டும் வலுவில்லை. ஏனெனில் நிச்சயமற்ற நிகழ்காலமும் அச்சமூட்டும் சூழ் நிலையும நிலவுகிறது. மொத்தத்தில் எல்லோருமே திக்குத் திசை தெரியாதவர்களாக அன்றாடப் பிரச்சினைகளை சமாளிப்பதிலேயே மூழ்கிப் போயுள்ளனர்' என்றார். இந்த உண்மை எத்தனை பேருக்கு உறைக்குமோ? உணர வேண்டியவர்கள் உணருவார்களா?

☐ தென்னிலங்கை அரச கூட்டுதாபனம் ஒன்றில் பணிபுரியும் பெரும்பான்மைச் சமூகத்தை சேர்ந்த உயரதிகாரி ஒருவர் அண்மையில் யாழ் வந்திருந்தார். தனது யாழ் அலுவலகத்திலிருந்து தொலைபேசியில் தனது மனைவியுடன் தொடர்பு கொண்டார்.

"நான் கதிர்காமத்திலிருந்து அல்ல யாழ்ப்பாணத்தில் இருந்து பேசுகிறேன்" என்றார் அவ்வதிகாரி தொலைபேசியில். "ஏன் சேர் அப்படிக் கூறினீங்கள் - அருகிலிருந்த யாழ்ப்பாணக் கோபுயா குழம்பிப் போனார்.

"யாழ்ப்பாணம் செல்வதை முதலியே சொன்னால் வீட்டில் அனுமதி தரமாட்டார்கள்" என்றார் அதிகாரி. ஒரு வீரசாகஸம் புரிந்த தோரணையுடன்!

☐ நீண்ட நாட்களின் பின் மாநகரத்திற்கு மீண்டும் முதல் பிரஜை! எல்லாப் பிரஜைகளுக்கும் கவலைகள் இருப்பது போல் இந்தப் பிரஜைக்கும் கவலை தான்! என்ன அப்படிக் கவலை? அலுவலகத்தில் சுழல் கதிரை கிட்டவில்லையே - என்பதாம்.

வண்டி கூழுக்கு அழுததாம்
கொண்டையோ பூவுக்கு அழுததாம்

☐ குடாநாடு படையினர் வசமான பிறகு பொது மக்கள் படையினர் உறவு பிரமாதம்! கண்டவுடன் புன் சிரிப்பு தொடக்கம் ஓருயிர் ஈருடல் வரை உறவுகள் பலவிதம். இது போக யாழ் புறகர்ப் பகுதி ஒன்றில் மருந்து தெளிகருவி வாங்கிக் கொண்டு போய் தமது பொலிஸ் நிலையத்தில் உள்ள தோட்டத் தேவைகளுக்கு பாவித்து வருகின்ற ஒரு வகை உறவும் இருந்து வருகின்றதாம்

அண்மையில் குறித்த தெளிகருவிச் சொந்தக்காரர், இரவு 8 00 மணியளவில் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள தோட்டத்திற்கு லாம்புடன் புறப்பட்டார் சில நிமிடத்தில் குறிந்த உறவுகாரன் இவரை நெருங்கினான்.

"ஹாய் மல்லி ஹொமத" என்றார் 72 வயதுடைய தோட்டக்காரர்.

கன்னத்தில் "பளார்", "பளார்" என வந்தது பதில். இவன் நிற்கிற நிலமை பிழை என மட்டுட்கட்டிக்கொண்டார் "அய்யா".

உறவுகாரன் பிடியிலிருந்து தந்திரமாக தப்பித்து வீட்டுக்குள் ஒளிந்து கொண்டார் அய்யா. இந்த உறவுக்கு என்ன பெயர் வைக்கலாம்!

☐ அதிகாலைகளில் "திருப்பள்ளி எழுச்சிப்" பாடல்கள் ஆலயங்களில் ஒலிக்க விட்டு கடவுளையும் மக்களையும் விழித்தெழச் செய்தது ஒரு காலம்! இப்பொழுது அப்படி இல்லை. காரணம் வசதி வாய்ப்புகள் ஒரு புறம் போக ஏன் வீண் வம்பு வேலைகள் என்ற நிலைமையும் உண்டு.

☐ சாவகச்சேரிப் பிரதேசத்தில் உள்ள ஒரு படை முகாமில் அதிகாலையில் "பிரித்ஓதல்" ஒலிக்க விடப்படுகின்றதாம், மக்களும் கடவுளும் இப்பொழுது மீண்டும் அதிகாலையிலேயே எழுந்து விடுகின்றனர் வரலாறு வெற்றிடங்களை விட்டு வைப்பதில்லைத் தானே!

☐ பசு மாடுகளை இறைச்சிக்காக கொல்வதை இந்த மண்ணிற்கு அறிமுகப்படுத்தியவாகள் அந்நியர்கள். அவர்கள் சென்று ஆண்டுகள் பல கடந்து விட்டபோதும் கோமாதாக்களைக் கொல்வதும், பசு மாட்டு இறைச்சியைப புசிப்பதும் மட்டும் நிற்கவில்லை. என்பது சைவப் பழங்களின் மனக் குமுறல். அதிலும் நோயுற்ற தாய்ப் பசு இறைச்சிக்காக அண்மையில் வெட்டப்பட்டுள்ளது என்ற தகவல் சுகாதார அக்கறையுள்ளவர்களுக்கு அதிர்ச்சி. செத்த மாடானால் என்ன - நோயுற்ற பசு என்றாலும் என்ன எல்லாவற்றிற்கும் தரம் நிரந்தரம் என்று முத்திரை குத்தப்படுகிறதாம். என்னே 'ஜீவ' காருணயம். நோயுற்ற பசுவின் இறைச்சியை வாங்கி உண்டால் நோயுற்று எவரும் வைத்திய சாலைக்கு வராமல் விட்டது அதிசயமான உண்மை.

☐ பதவிகளை பொறுப்பேற்ற கையோடு மக்கள் பிரதிநிதிகள் சேவை பாற்றதொடங்கியிருப்பதால் அதிகாரிகள் பாடு திண்டாட்டமாக இருப்பதாக முணு முணுப்புக்கள் கேட்கிறது.

☐ அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகப் பற்றற்ற கலந்துரையாடலில் வெள்ளை நிறத்தவர் தெரிவித்த ஒரு கருத்துகுறித்து அந்தரங்கத்தில் கிசுகிசுக்கப்படுகிறது. குடிநீர் வழங்கல், மலசல கூட வசதிபோன்ற மக்களின் அத்தியாவசிய தேவைகளை அரசசார்பற்ற நிறுவனங்கள் கவனிக்காது விட்டிருந்தால் மக்கள் எல்லாரும் மீண்டும் வன்னிக்குத் தான் ஓடியிருப்பார்களாம. உள்ளூர் அரசியல் கட்சிகளும், பாதுகாப்பு வட்டாரங்களும் அ. சா. நிகளின் சேவையில் குளிர்காய்ந்து கொள்கின்றனவாம் என்று மனந்திறந்து பேசினாராம் அந்த வெள்ளை உள்ளம்.

☐ தீவுப் பகுதியில் இருக்கும் ஒரு பாடசாலை அது. சில 'தோழர்'களின் பிள்ளைகளும் அங்கு படிக்கிறார்களாம். 'தோழர்களின் பிள்ளைகள் என்பதால் விசேட கவனிப்புக்கு பதில் தரக்குறைவான ஏச்சுக்கள், தாராளமாம். 'தகப்பன் செய்யிறது சரியோ பிழையோ எண்டு எனக்குத் தெரியாது ஆனா அதுக்குப் பிள்ளைகளைத் தண்டிக்கலாமோ" என்று மனம் வெதும்பி கேட்கிறார் ஒரு தாய்.

# நிச்சய வெற்றிப் படையினரின் எட்டப்படாத இலக்கு...?

எந்தத் துப்பாக்கியும் குறி தவறாமல் சுடவல்லது எனினும் விடுதலைப் புலிகளிடம் இருக்கும் துப்பாக்கிகளுக்குத் தான் சிறிலங்கா அரசாங்கத்துடன் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களில் பேரம் பேசும் ஆற்றல் இருக்கின்றது. இது மிகையான கணிப்பிடோ அல்லது சம்பிரதாய பூர்வமானதொரு புகழ் உரையோ அல்ல. எந்த அரசியல், இராணுவ விமர்சகரும் இதனை இலகுவில் மறுத்துவிட முடியாது.

## அரசியல் அரங்கம்

— இராசகிளி —

விடுதலைப்புலிகளிடம் இருக்கும் இத்தகைய பேரம் பேசக்கூடிய ஆற்றலை நிர்மூலப்படுத்துவதே சிறிலங்காவின் முப்படைகளினதும் இலக்கு. படைத்தரப்பினர் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையைத் திட்டமிடும் போதும், செயற்படுத்தும் போதும் இந்த அரசியல் இலக்கை எட்டுவதையே குறிக் கோளாகக் கொள்கின்றனர்.

வடக்கிற்கான தரை வழிப் பாதையை ஏற்படுத்துவது என்ற முலாம் பூசி வெற்றி நிச்சய முழக்கம் கேட்கத் தொடங்கிப் பத்து மாதங்களுக்கும் மேல் கடந்து விட்டது. பாதை திறக்கப்படுவதை முழு மூச்சுடன் விடுதலைப்புலிகள் எதிர்த்து வருகின்றனர் என்பது எவருக்கும் இலகுவில் தெரியக் கூடியது. இதனால் படையினர் நினைத்த வேகத்தில் இலக்கினைச் சென்றடையவும் முடியவில்லை, பாதையைத் திறந்து விடவும் முடியவில்லை. இப்போது பாதை திறப்பதை விடவும் காட்டில் ஒளித்திருக்கும் புலிகளை சண்டைக்கு இழுப்பதை நோக்கமாகக் கொண்டே இராணுவ நடவடிக்கைகளில் தாமதமும், தேக்கமும் ஏற்படுத்தப்படுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவிக்கின்றார். இது திட்டமிட்டபடி இராணுவ நடவடிக்கைகளை செய்து முடிக்க முடியாத இயலாத்தன்மையின் வெளிப்பாடு என்பது மிகையாக இருக்காது.

பாதை திறக்கப்பட்டு விடுவதற்கு விடுதலைப்புலிகள் காட்டும் தீவிரமான எதிர்ப்பின் அரசியல் உள்ளடக்கம் புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகும். வட பகுதிக்கான தரை வழிப் பாதை திறப்பதற்கு படையினர் மேற்கொளளும் முயற்சியை விடுதலைப் போராட்டத்தின் கழுத்தில் போடப்படும் சுருக்குக் கயிறு என்று விடுதலைப் புலிகள் இதழில தெரிவிக்கப் பட்டிருந்த கருத்து இவ் இடத்தில் நோக்கப்பட வேண்டியதாகும். படையினரின் பிரதான விநியோக வழிகளான கடல், வான் மார்க்கங்களின் பயன்படுத்தலால் ஏற்படும் பொருளாதாரச் சுமையைக் குறைப்பதற்கு தரை வழிப் பாதை திறக்கப்படுவது பயன்படும் என்பதும் உண்மையே;

தரை வழிப்பாதை இல்லாமையால் வட பகுதி மக்கள் பெரும் சிரமத்துடன் நாளாந்த வாழ்க்கையை நகர்த்த வேண்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கதே. வான், கடல் மார்க்கப்பயணங்களுக்காக படையினரின் அனுமதி பெறுவதற்காக தன்மானத்தைப் பணயம் வைக்க வேண்டிய நிலை ஒரு புறமும், பொருளாதாரச் செலவீனங்கள் மறுபுறமும், அலைச்சல்கள் இன்னுமொரு புறமுமாக சங்கடங்கள மலிந்து போயுள்ளது. பாவனைப் பொருட்கள் முதல் அத்தியாவசிய பண்டங்கள் வரை அனைத்திற்கும் கப்பல் கட்டணம் செலுத்தும் பொறுப்பு பொது மக்கள் தலையில் கட்டியடிக்கப்படுகிறது.

இந்தச் சுமைகளை மக்கள் எவ்வளவு காலத்திற்கு மௌனமாகச் சுமக்கமுடியும் என்பது எண்ணிப் பார்க்கப்பட வேண்டியதாகும். எனவேதான் விடுதலைப்புலிகளின் பேரம் பேசும் ஆற்றல் பலவீனப்படுத்தப்படாமல் வடபகுதிக்கான தரைவழிப் பாதையைத் திறக்க முடியாதா என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியில் எழுகின்றது. பொருத்தமான அரசியல் முன்னெடுப்புக்களின் மூலம் இத்தகைய நிலமைகள் எதிர்கொள்ளப்படவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது எனலாம். இது பற்றிய ஒரு கலந்துரையாடலின் போது சாதாரண யாழ்ப்பாண வாசி ஒருவர் தெரிவித்த கருத்து இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் சந்திரிகா அரசுடனான பேச்சுக்கள் குடாநாட்டு மக்களுக்கு பாதுகாப்பான தரை வழிப் பாதை தேவை என்ற முக்கிய காரணத்தினாலேயே முறிவடைந்தன. இப்போது பாதை திறக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே போராட வேண்டியுள்ளது என்பது அவர் தெரிவித்த கூற்றாகும்.

படைப்பலப் பிரயோகத்தின் மூலம் வடபகுதிப் பாதை திறக்கப்பட்டு விட்டால் தமிழ் மக்கள் சார்பாக முன்வைக்கப்படும் அரசியல் கோரிக்கைகள் சிறிலங்கா அரசாங்கத்தால் ஏறெடுத்தும் பார்க்கப்படமாட்டாது என்பதே சாதாரணமாக அரசியல் அபிப்பிராயம் தெரிவிப்பவர்களின் ஐயப்பாடு என்று குறிப்பிடுவது இங்கு பொருத்தமானதாக இருக்கலாம்.

---

நூற்றாண்டு விழா நினைவாக...

## தந்தை செல்வா விட்டுச்சென்ற உயில்!

தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாம் ஒரு காலத்தில் சமஷ்டி இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆனால் சமஷ்டி மூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவது சாத்தியப்படாது. கடந்த கால அனுபவங்களின் மூலம் இப்போது இதை அறிந்து கொண்டு விட்டோம்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியே பிரிந்து வாழ வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்து விட்டோம். இதை நாம் செய்யா விட்டால், தமிழினம் தனது இழந்த உரிமைகளை ஒரு போதும் மீட்டுக் கொள்ள முடியாது.

எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தனர். அவர்கள் தங்களுக்கெனத் தனியாட்சியை வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் எங்களுக்கென ஓர் இடம் இருக்கிறது. எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை இழந்த எங்கள் உரிமையான தமிழ் இராச்சியத்தை மீள அமைக்க வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடாகும்

தனித் தமிழ் ஈழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகிறது, தனித் தமிழ் ஈழம் நிறுவுவது சுலபமான காரியமல்ல என்பதும், மிகவும் கஷ்டமானதென்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனால் நாம் ஒன்றில் சிங்களவர்களின் அதிகாரத்துக்குள்ளிருந்து விடுபட்டு வெளியேற வேண்டும் அல்லது அழிந்து போகவேண்டும். இது உறுதியானது. எனவே நாங்கள் போராடி தனித் தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவோம!

நாங்கள் சமஷ்டிக் கோரிக்கையை கைவிட்டுவிட்டோம். எங்கள் தனி நாட்டுக்கான இயக்கம் அஹிம்சை அடிப்படையிலேயே நடைபெறும்.

— ஹன்சார்ட் — 19 - 11 - 76:

அனுப்பியவர் :- "நீர்வைமணி"

---

## விமானங்கள் விழுத்தப்பட்டாலும் யுத்தம் முன்னெடுக்கப்படும்

—தர்மசிறி சேனநாயக்க

(யாழ்ப்பாணம்)

விமானங்கள் வீழ்த்தப்பட்டாலும் அதைவிட நஷ்டங்கள் ஏற்பட்டாலும், யுத்தத்தை கடைசிவரை முன்னெடுப்போம். இவ்வாறு அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க கூறியுள்ளார்.

குருநாகலில் அண்மையில் பொதுக்கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய அவர் குறிப்பிடுகையில் குண்டு வெடிப்புக்களைக் கண்டு நாம் அஞ்சப்போவதில்லை. அரசியல் தீர்வுத் திட்டம் பற்றி வாய் மூடியுள்ள ஐ.தே.க வினர் தலதா மாளிகையில் குண்டு வெடிப்பு இடம் பெற்றதும் இனக் கலவரம்; அரசாங்கம் கவிழ்ந்து விடும் என்று நம்பியது ஆனால் மக்கள் இவை பற்றி நன்கு அறிந்துள்ளனர். இனவாதச் செயல்களை எவரும் கட்டவிழ்த்து விட்டாலும் மக்கள் செவிசாய்ப்பதில்லை. எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் எமது பக்கம் சார்ந்தே வாக்களிக்கின்றார் எனவும் தெரிவித்தார். (ரி)

## எலும்புகள் மீட்பு

(வவுனியா)

வவுனியா ஓசதப்பிட்டிய சிங்கள குடியேற்ற கிராமத்தில் பெருமளவில் எரிந்து சாம்பரான நிலையில் சடலமொன்றின் எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியாவிலிருந்து 5 மைல் தூரத்தில் கைவிடப்பட்ட குழி ஒன்றில் இந்த எலும்புகள் காணப்பட்டன. (சி)

## அமெரிக்க கமாண்டோக்களால் கடற்படைக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க விசேட கடற்படைக் கமாண்டோக்களான 'சீல்' அண்மையில் இலங்கைக் கடற்படைக்கு விசேட கடற்படை பயிற்சிகளை வழங்கியுள்ளனர் எனத்தெரிய வருகிறது. காலி, தங்காலை பகுதிகளில் இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இது அமெரிக்க - இலங்கை கூட்டுப் படைகளின் மூன்றாவது இணைந்த பயிற்சியாகும்.

அமெரிக்க இராணுவத்தின் சிறப்புப் படைப் பிரிவான 'கிறீன் பெரட்ஸ்' இலங்கை இராணுவத்திற்கு பயிற்சிகள் வழங்கி வருவது தெரிந்ததே.

இத்தகைய பயிற்சிகள் மேலும் தொடரும் எனவும், இதனை அதிகரித்தளவில் வழங்குவது குறித்து அந்தந்தக் கால வேளையில் தீர்மானிக்கப்படும் எனவும், இந்தக் கூட்டுப் பயிற்சிக்கு பொறுப்பாகவுள்ள ஹவாய் தீவின் பேர்ள் துறைமுகத்தை தலைமையகமாகக் கொண்ட எச். சுமித் தெரிவித்துள்ளார் எனவும் கூறப்படுகிறது. (சி)

## சமய ஆசிரியர் பரீட்சைபெறுபேறு விரைவில்

தமிழ்மொழி மூலம் சமய பாடம் போதிப்பதற்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் வாரத்தில் வெளியிடப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்பரீட்சை கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்டது தெரிந்ததே. (கே)

# வைகறைக்கதிர்

## விடுகதைகள்

செலவில்லாமல் வீடு கட்டி
நிலையில்லாமல் வாழ்பவள்
அவள் யார் — சிலந்தி

நீரிலே தான் பிறப்பான்
நீரிலே தான் அழிவான்
அவன் யார் — உப்பு

எரியாமலே கரியாகும்
கரியெல்லாம் வரியாகும்
அது என்ன — பென்சில்

ஆற்றைக் கடக்கும்
அக்கரையும் போகும்
தண்ணீரில் கரையாது
தானும் நனையாது
அது என்ன — ஒலி

ஆயிரம் முடிச்சிருக்கும் — ஆனாலும்
ஓட்டைகளும் ஆயிரமிருக்கும்
அது என்ன — வலை

## புதிய ஆத்திசூடி

அச்சம் தவிர்!
கேட்டிலும் துணிந்து நில்!
கொடுமையை எதிர்த்து நில்!
சரித்திரத் தேர்ச்சி கொள்!
சாவதற்கு அஞ்சேல்!
சிதையா நெஞ்சு கொள்!
சுமையினுக்கு இளைத்திடேல்!
சூரரைப் போற்று!
செய்வது துணிந்து செய்!
சொல்வது தெளிந்து சொல்!
தெய்வம் நீ என்றுணர்!
தேசத்தைக் காத்தல் செய்!
பிழைக்கு இடங் கொடேல்!
புதியன விரும்பு!
பூமி இழந்திடேல்!
பேய்களுக்கு அஞ்சேல்!
மூப்பினுக்கு இடங்கொடேல்!
ரூபம் செம்மை செய்!
உலுத்தரை இகழ்!
வருவதை மகிழ்ந்துண்!
வீரியம் பெருக்கு!
வெடிப்புறப் பேசு!
வேதம் புதுமை செய்!

— மகாகவி பாரதி

## குஞ்சு மீனாரே

நீருக்குள்ளே அழகாக
நீந்தும்
குஞ்சு மீனாரே!
நீரை விட்டு
வெளியாலே
நீரும் கொஞ்சம்
வருவீரோ?

நீருக்குள்ளே
நான் வந்தால்
நீந்தச் சொல்லித்
தருவீரோ?
நீருக்குள்ளே
நீர் என்ன
நிறையத் தின்ன
வைத்துள்ளீர்?

## பட்டம்

நூலில ஏற்றி
விட்ட பட்டம்
வாலை வாலை ஆட்டுது.
மேலே மேலே
ஏற ஏற
நூலை நூலைக் கூட்டண்ணா
மூச்சை கட்டி
விட்ட பட்டம்
உச்சி உச்சி ஏறுது
பசசை நிறமோ
நீல வானப்
பந்தலுக்குள் போகுது.

## புதுக்குறள்

— சாமி. சிதம்பரனார் —

### நாடு

1. அன்புக கனி நுகர்ந்து ஆனந்தமாய் மக்கள் இன்புற்று வாழ்வதே நாடு
2. இரப்போரும் ஈவோரும் இல்லாமற் செல்வம் சுரக்கின்ற நாடே சுகம.
3. ஊர்கள் நகரங்கள ஒன்றாய்த் தழுவுவதற்கு நேர் வழிகள் கொண்டதே நாடு.
4. கலவி விவசாயம் கைத்தொழிற் பண்டங்கள் செல்வம் கொழிப்பதே நாடு.
5. நீர்ப்பாசனமும் நிறைந்த விளை பொருளும் எத் தொழிலும் நாட்டுக்கினிது.
6. பூமிக்குள் ஆழ்ந்து கிடக்கும் புதை பொருள்கள் சேமிக்கும் நாடே சிறப்பு
7. வானோங்கு சோலை வளர்ந்தரு நீர்த்தேக்கம் தாமெந்த நாட்டுக்கும் கண்
8. வான்நீர் நிலப்படைகள் வாய்த்திருந்து சாந்தி மரம் தான் தழைத்து நிற்பதுவே நாடு.
9. விஞ்ஞானத் தால மக்கள் வேதனைகள் தீர்த்து வளம் செய்வதுவே சிறந்த நாடு
10. வெளிப்பகை உட்பகை வேர்களைந்து மக்கள் களிப்புற்று வாழ்வதே நாடு.

## மூளையில்லாத கழுதை

— உருவகக் கதை

காட்டு மிருகங்களில் ராஜாவான சிங்கம் சிறு மிருகங்களை வேட்டையாடி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தது. சிங்கத்தின் கொடூரத்தையும், அட்டகாசத்தையும் தாங்கமுடியாத மற்ற விலங்குகள் வேறு காடுகளுக்கு பயந்து ஓடியது.

சிங்கம் சாப்பிட்ட மிச்சத்தை தின்று உயிர் வாழ்ந்து வந்த நரி இதைக் கேள்விப்பட்டு அதிர்ச்சிக்குள்ளாகி, தாமதிக்காமல் சிங்கத்திடம் சென்று...

### ஜெயா மாமா

ராஜாவின் ராஜாவே! எம் இனத்தின் பாதுகாவலனே! தங்களைக் கண்டு இந்தச் சிறு மிருகங்கள் வேறு காடுகளுக்கு பயந்து ஓடுவது தங்களுக்கு இழுக்கென்று தெரியவில்லையோ நீங்கள்' கண் அசைத்தால் உங்கள் காலடியில் வந்து ஜீவனை விட காத்திருக்கும் இந்தச் சிறுமிருகங்களை வேட்டையாடுவது உங்கள் வீரத்திற்கு தகுதியாகுமா? ...... உங்கள் கோபத்தையும் சினத்தையும் கொஞ்சம் அடக்கி அமைதியாகுங்கள் சிங்கராஜாவே, நான் இதோ சற்று நேரத்தில் வருகின்றேன். என்று சொல்லிய குள்ளநரி, தப்பி ஓடும் சிறு மிருகங்களை சமாதானப்படுத்தி தடுத்து நிறுத்தியது.

குள்ளநரி தனது வஞ்சக வலையை அந்த அப்பாவி மிருகங்கள் மீது வீசியது. தொடர்ந்தும் பேசலானது ...... நீங்கள் எல்லோரும் எவ்வளவு தூரத்திற்கு ஓடப்போகிறீர்கள் சிங்கராஜா நினைத்தால் உங்களை எங்கும் சென்று வேட்டையாடமுடியும். நான் சொல்வதைக் கேளுங்கள சிங்கராஜாவின் கோபத்திலிருந்து உங்களை நான் காப்பாற்றுகிறேன் சமாதானம் பேசி சிங்கத்தை சாந்தமடையச் செய்கின்றேன். என்னை நீங்கள் நம்பலாம் என்று குள்ளநரி ஆசை வார்த்தை பேசியது.

நரியின் பேச்சை நம்பி சமாதானமடைந்த சிறு மிருகங்கள் தங்கள் பழைய இருப்பிடத்திற்கு திரும்பியது. சிறு மிருகங்களின் மனமாற்றத்தை கண்டு நரி மகிழ்ச்சியடைந்தது.

காலாற நடந்து போய் வருவோம் என்று சொல்லி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மிருகத்தை ஏமாற்றிய சிங்கத்திடம் கூட்டிச் சென்று இரையாக்கியது. தானும் மிச்சத்தை தின்று மகிழ்ச்சியடைந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பல்நாட்டுப் பழமொழிகள்

- ஒவ்வொருவனும் தன்னை அறிஞன் என்று நினைக்கின்றான். அதனால் தான் இத்தனை முட்டாள்கள இருக்கின்றார்கள்.
  — ஹங்கேரி —
- உலகில் முட்டாள்கள் இல்லாது இருந்தால் ஒருவன் அறிவாளி என்று தெரிந்து கொள்வது எப்படி?
  — நோர்வே —
- ஒரு ஞானியின் வாழ்க்கையின் ஒரு நாள் ஓர் அறிவிலியின் முழு வாழ்க்கைக்கு சமம்.
  — அரேபியா —
- அறிவிலி முடிவில் செய்வதை விவேகி முதலில் செய்வான்,
  — ஸ்பெயின் —
- அம்மண தேசத்தில் கோவணம் கட்டியவன் பைத்தியக்காரன்.
  — தமிழ்நாடு —
- நீ கழுதை என்று நாலு பேர் சொன்னால் கடிவாளம் பூட்டிக் கொள்வதே நல்லது.
  — ஸ்பெயின் —
- அறிஞன் தவறு செய்யமாட்டான். ஆனால் அவன் தவறு செய்து விட்டால் அதைத் திருத்த முடியாது.
  — திபெத் —

## இந்த மண்ணில் வளரும் அரும்புகளுக்கு

காலைக்கதிர் சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கான பகுதியாக 'வைகறைக்கதிர்' இனி வரும் இதழ்களில் வெளியிடப்படவுள்ளது. இப்பகுதிக்கான படைப்புக்கள் பாடசாலை மாணவரிடமிருந்தும், சிறுவர்களின் படைப்பாற்றலை வளர்க்க விரும்புபவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:

வைகறைக்கதிர்,
மே/பா காலைக்கதிர்,
த. பெ. எண் 145
யாழ்ப்பாணம்,

## இனப்பிரச்சினை தீர்வு பற்றிய
# ஐ. தே. கவின் மாற்று யோசனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை

பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்

இனப்பிரச்சினை தீர்வுக்காக ஐ.தே.க சமர்ப்பித்த மாற்று யோசனைகள் தெளிவற்றவை ஏற்கமுடியாதவை என நீதி அரசியலமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். காணியுரிமை, பொலிஸ் அதிகாரம், வெளிநாட்டு முதலீடு என்பன தொடர்பாக ஐ.தே.கவின் நிலைப்பாடு தெளிவாக இல்லை. அதிகாரங்கள் பரவலாக வேண்டும் என முன்னர் ஐ.தே.க கூறியது அரசியலமைப்பிற்கான 13 ஆம் திருத்தச்சட்டத்தின் மூலம் உத்தேசிக்கப்பட்ட அதிகாரப்பரவல் போதாது என அது ஏற்றிருந்தது, 1992 இல் மங்கள முனசிங்க குழுவின் இடைக்கால அறிக்கையும் ஐ.தே.க வினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது ஆனால் இப்போது 13 ஆம் திருத்தச்சட்டத்திற்கு கூடுதலாக அதிகாரம் பரவலாக்கக்கூடாது என ஐ.தே.க வின் எம்.பி யான ரொனி டி மெல் கூறுகிறார் எனவும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டினார்,

மேலும் அவர் இது பற்றிக் குறிப்பிடுகையில், முக்கிய தேசியப்பிரச்சினையை தட்டிக்கழிக்கும் ஐ.தே.கவின் தந்திரமே இதுவாகும். தலதா மாளிகை குண்டுவெடிப்பிற்கு பின் அரசின் தீர்வு யோசனைகளை ஐ.தே.க நிராகரித்தது. இது அரசியல் லாபத்தோடு எடுக்கப்பட்ட நடவடிக்கை;

எம்.பி சரத் அமுனுகம அண்மையில் ராவய பத்திரிகைக்கு அளித்த அறிக்கையில் மாற்று யோசனையை சமர்ப்பிக்க ஐ.தே.க மேலும் அவகாசம் கோருகிறது என குறிப்பிட்டுள்ளார், இப்படி இப்போது காலத்தை கடத்த முடியாது. ஐ.தே.க சமர்ப்பித்த கடைசிப்பகுதியை ஆராய பாராளுமன்ற தெரிவுக் குழுவை மீண்டும் கூட்ட முடியாது, இது காலத்தை கடத்துவதாகி விடும். பாராளுமன்ற தெரிவுக்குழு இரண்டரை வருடம் கூடி ஆராய்ந்தது. இனியும் காலத்தை இழுத்தடிக்க முடியாது, போரை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துமாறு மக்கள் இந்த அரசை நிர்ப்பந்திக்கின்றனர்,

ஐ.தே.க மீண்டும் பதவிக்கு வந்ததும் ஆறுமாதத்திற்குள் புதிய அரசியல்யாப்பை வகுக்கும் என ரொனி டி மெல் கூறியுள்ளார், இது மக்களை தவறான வழியில் இட்டுச் செல்லும் பேச்சாகும் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையினால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெற எக்கட்சிக்கும் கடினம் எனவே நினைத்த மாத்திரத்தில் அரசியல் யாப்பை மாற்றிவிட முடியாது.

60 சதவீத எம்.பிகவின் உதவியுடன் மாகாணசபைகளை கலைக்க முடியும் என்ற ஐ.தே.கவின் பிரேரணை கண்டிக்கப்பட வேண்டியது 13 ஆம் திருத்தம் மூலம் கிடைத்த அதிகாரங்களை கூட இது பறித்துவிடும் எனவே ஐ.தே.கவின் மாற்று யோசனையை எவரும் ஏற்க முடியாது, தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண ஒத்துழைக்காமல் அதை திசைதிருப்பி அரசியல் லாபம் பெறவே ஐ.தே.க முயற்சிப்பதாக அமைச்சர் பீரிஸ் குற்றஞ் சாட்டினார். □

## கொழும்பில் நடந்த
# 21 குண்டு வெடிப்புகளின் போது 7000 பொது மக்கள் பலியாம்

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கொழும்பில் இடம்பெற்ற இருபத்தியொரு குண்டு வெடிப்புக்களிலும் சுமார் ஏழாயிரம் பொது மக்கள் பலியாகியிருப்பதாக பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய முன்னணி என்ற அமைப்பைச் சேர்ந்த சம்பிக ரணவக்க என்பவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்திய இம்முன்னணியினர் விடுதலைப் புலிகளுடன் போர் வேண்டும் எனக்குரல் எழுப்பும் தலைவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன அரசு இத்தகைய நடவடிக்கைகளை எடுக்காது விடின நாம் நடவடிக்கையில் இறங்க வேண்டியிருக்கும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஜீ)

# போர், பட்டினி, நோய்களால் வன்னி மக்கள் அல்லல்படுகின்றனர்

## ஆசிய மனித உரிமைகள் நிறுவனம் தகவல்

வன்னியில் அண்மையில் ஆசிய மனித உரிமைகள் நிறுவனம் மேற்கொண்ட ஓர் ஆய்வின் மூலம் அப்பகுதியில் உள்ள அனைத்து இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் சுமார் 300,000 அகதிகள் தங்கியிருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் அநேகர் கிடுகு ஒன்று 40 ரூபாய்ப்படி கொள்வனவு செய்து குடிசைகளை அமைத்து அதில் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் வாழ்வதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இப்பகுதியில் மக்களிடையேயும் அரசசார்பற்ற அமைப்புகளிடையேயும் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புகளிடையேயும் மேற்கொண்ட சந்திப்புகளிலிருந்து இவர்களில் அநேகமானோர் தற்போது அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை கவனத்திற் கொண்டதாகவோ அல்லது அதில் அக்கறை காட்டியதாகவோ இருக்கவில்லை என அறிய வந்துள்ளதாக ஆசிய மனித உரிமை நிறுவன ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, போர் தொடர்ந்து நீடிக்கும் இன்னல்கள் தொடரும் என்ற கருத்தே அவர்களிடையே காணப்படுகிறதாம்.

இந்த நேரடி ஆய்வு நான்கு பேர் கொண்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. இக்குழுவினர் வவுனியா, மடு தேவாலயம், செட்டிக்குளம், பெரியமடு, விடத்தல் தீவு, வேலங்குளம், துணுக்காய், மல்லாவி, கொக்காவில், முருகண்டி, இரணைமடு சந்தி, விஸ்வமடு, தர்மபுரம், அக்கராயன்குளம், வன்னேரிக்குளம், ஜெயபுரம், பள்ளிக்குடா, பூநகரி ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்து இந்த ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்,

அந்த ஆய்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வன்னிப் பகுதியில் நடக்கும் போர் இருபக்கம் தீட்டப்பட்ட வாள் போன்று காணப்படுகின்றது. ஒன்று தொடரும் போர் மற்றையது பட்டினியும் நோயும், இங்கு காணப்படும் கடும் உணவுத் தட்டுப்பாட்டினால் வயதானவர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றனர். இளவயதினர் எப்படியோ சமாளித்து விடுகின்றனர். வயதானவர்களே நோயாலும் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இவர்கள் பொது இடங்களிலும் சந்திகளிலும் பிச்சை எடுக்கின்றனர். மற்றுமோர் பாதிப்பு உளவியல் தாக்கமாகும். குறிப்பாக இதில் பெண்கள் அதிகமாக பாதிக்கப்பட்டு காணப்படுகின்றனர்.

உணவு லொறிகள் போதியளவு செல்லாமையினால் பெரும் உணவுத் தட்டுப்பாடு நிலவுகின்றது. சீனி கிலோ 44 ரூபா, அரிசி கிலோ 40 ரூபா, கத்தரி கிலோ 120 ரூபா வெண்டி கிலோ 100 ரூபா தேங்காய் 35 ரூபா என்ற உச்ச விலை காணப்படுகின்றது. இவற்றை வாங்க போதிய பணமும் மக்களிடம் இல்லை, இவர்கள் அடிக்கடி இடத்திற்கிடம் இடம்பெயர்வதால் உணவுப் பொருட்களை எடுத்துத்திரிய முடியாத நிலையில் சிறுபிள்ளைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்படுகின்றனர் மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு மலேரியாவும் நெருப்புக் காய்ச்சலுமே இம்மக்களை வருத்தும் முக்கிய நோய்களாக உள்ளன.

ஆசிய மனித உரிமைகள் நிலையம் அக்கராயன் குளம் ஆஸ்பத்திரி தர்மபுரம் மிஷன் வைத்தியசாலை, மல்லாவி டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலை என்பவற்றுக்கு விஜயம் செய்த போது அடிப்படை மருத்துவ வசதிகளுக்கே திண்டாடுவதாக வைத்தியர்கள் குறிப்பிட்டனர்.

சர்வதேச செஞ்சிலுவை சங்கம், இலங்கை செஞ்சிலுவை சங்கம், ஒக்ஸ்பாம், கெயர், யூ. என். எச், சி. ஆர். சிறுவர் பாதுகாப்பு நிதியம், ரெட்பானா, எஸ். எல். சி.ஐ. சி. ஏ. போன்ற அமைப்புகள் நெருக்கடிகள் மத்தியிலும் பாதிக்கப்பட்ட இம்மக்களுக்காக நல்ல சேவையை ஆற்றுகின்றன என அந்நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. □

# யாழ் வேலைத் திட்டங்களுக்காக யு.என்.எச்.சி.ஆர். நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் (யு.என்.எச்.சி.ஆர்) யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளவுள்ள வேலைத்திட்டங்களுக்காக 85.5 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. இப்பணம் வடக்கிற்கான புனர்வாழ்வு மற்றும் மீளக்குடியமர்வு அதிகார சபை மூலமாக 1998 ஜனவரி 1 முதல் 31 வரை உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் நலவாழ்வுக்காக செலவிடப்படவுள்ளது.

குடிநீர், சுகாதாரம், கல்வி, நகர சுத்தி போன்ற வேலைத் திட்டங்களுக்காக பயன்படுத்தப்படவுள்ள இப் பணம் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அலுவலகம் ஊடாக ஐ.நா அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தால் செலவிடப்படும்.

மார்ச் 10ந்திகதியன்று வெளியான ஐ.நா உயர் ஸ்தானிகராலய செய்திக் குறிப்பு ஒன்றில் மேலும் குறிப்பிடப்படுகையில், —1772,20874,00 ரூபா அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக செலவிடப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் அகழ்வாராய்வு புதுப்பிப்பதற்கு முயற்சி.,.?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வரலாற்றுப் பெருமை மிக்க இடங்களான கந்தரோடை, ஆனைக்கோட்டை, வரணி, வல்லிபுரக் கோவில் போன்ற இடங்களைப் பார்வையிடவும், எதிர்கால அகழ்வாராய்வுகள் குறித்துத் திட்டமிடவும் தென்னிலங்கையைச் சேர்ந்த பௌத்த மதகுருமார் சிலர் கடந்த வாரம் யாழ்ப்பாணம் விஜயம் செய்தனர்,

கொழும்புப் பல்கலைக்கழக வரலாற்றுறை விரிவுரையாளர் உட்பட விஜயம் செய்த இக் குழுவினர் மேற்படி இடங்களைச் சென்று பார்வையிட்டதுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத் துறையைச் சேர்ந்தவர்களையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர்,

"அகழ்வாராய்வுகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் தேசிய சொத்துக்களாக மதிக்கப்பட வேண்டுமே தவிர இனவாதக் கண்ணோட்டத்துடன் நோக்கப்படக் கூடாது." எனவும் கடந்த காலங்களில் கந்தரோடை, ஆனைக்கோட்டை, போன்ற இடங்களில் வரலாற்றியலாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் வரலாற்றுத் துறையைச் சேர்ந்த சிரேட்ட விரிவுரையாளர் ஒருவர் குறிப்பிட்டார். (கே)

# கவிதைக்கதிர்

## சுதந்திரம்

ஜனநாயகம் இன்று வராது!
இந்த வருடம்
இல்லை எப்போதும் வராது!
சமரசத்தின் வாயிலாகவும் —
பயத்தாலும் —
எவ்வளவு உரிமை அடுத்தவனுக்கு
உண்டோ...
அவ்வளவு எனக்கும் உண்டு.
இரண்டு கால்களில் நிற்கவும்
பூமியை உரிமை கொண்டாடவும்
தான்.
நாளை என்பது இன்னொரு நாள்.
அவையவை
நடக்கும் போது நடக்கும்
என்று மற்றவர்கள்
சொல்லக் கேட்டுசேர்ந்துபோனேன்,
செத்த பின்பு
எனக்குச் சுதந்திரம் தேவையில்லை:
நாளைய உணவில் என்னால்
இன்று வாழ முடியாது.
சுதந்திரம்
ஒரு வலுவான விதை
நாளைய
மிகப் பெரிய தேவைக்காக
விதைக்கப்பட்டது.
உனக்குத் தேவைப்படுவது போலவே
எனக்கு சுதந்திரம் தேவை.

— லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ்
(அமெரிக்க கறுப்பு கவிஞர்)

## எதிரொலி

என்றோ ஒரு நாள்
இழந்த
என் இருப்பை நிச்சயப்படுத்த
காத்திருக்கும் என் இதயச் சுவர்கள்,
ஏக்கம்... எதிர்பார்ப்பு...
ஆசை... ஆதங்கம்...
அத்தனையும்;
மழைத்துளியின் மத்தியில்
முளைத்த
நீர்க்குமிழிகளாக!
முகங்காடு போட்ட,
மன இருளின்
ஒளியைத் தேடி...
முட்புதரில் முகம்புதைத்து
அழுது கொண்ட.
உள்ளத்தின் மீட்சியைத் தேடி...
இந்த ஜீவனின் உயிர்ப்புக்காகவே!
நீர் வற்றி பாளமாக வெடித்திட்ட
செம்மண்ணில்,
பதிந்து கொள்ளும் பாதச்
சுவடுகளாக...
சுட்டெரிக்கும் உள்ளத்துடன்
உள்ளிருந்து தத்தளிக்கும் ஓசைகள்!
இன்னும்;
என்றோ ஒருநாள்
இழந்த
என் இருப்பை நிச்சயப்படுத்தவே!

— எஸ். குணேஸ்

## விபத்து

தினமும்
ஒசிப் பத்திரிகை
வாசிக்கும்
நண்பர்
ஒரு நாள்
பல பத்திரிகைகளை
விலை கொடுத்து
வாங்கினார்,
தனது
விபத்துப்படம்
பத்திரிகையில்
வெளிவந்திருப்பது
பார்ப்பதற்கு,

## வாழத்தகுதி

எங்கள் மண் இது
தனித்துவமானது
இந்த மண்ணில்
பண்புகள்
பலவிதம்
இங்கு வாழச்
சில தகுதிகள்
வேண்டும்.
படித்தவர்
பெரியோர்
பட்டம், பதவிகள்
வகிப்போர்
அரசியல் வாதிகள்
அடிவருடிகள்
பலரது குணமும்
பற்பலவிதமாப்
பார்த்தாலும் புரியாது
பழகினும் புரியாது
நுண்மாண் நுழைபுலன்
கொண்டோராக
கைராசி, முகராசி
மிகவுடையோராய்க்
காலமறிந்து
கணக்கான
இடமறிந்து
வாழப்பழகினால்
இங்குநாம்
நலமே வாழலாம்.

## முகராசி

அறிவுத் தராதரப்
பத்திரங்களுடன்
அலைந்து
திரிந்து
கிடைக்காத தொழில்
புறக்கதவு
அறிமுகத்தால்
சிறப்பிடமாய்க்
கிடைத்தது.

— நீர்வை தியாகமணி —

# தமிழர் வேட்கையை ஆங்கிலத்தில் எடுத்துரைத்த சிங்களப் பத்திரிகையாளர்

## காமினி நவரட்ணவிற்கு அஞ்சலியுடன்

எம். நிமலராஜன்

பத்திரிகை உலகுடன் நீண்டகாலத் தொடர்புகள் உடையவரும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்பட்ட Saturday Review — வார இதழின் ஆசிரியராகப் பணியாற்றிய வருமான திரு. காமினி நவரட்ணா மார்ச் 03ம் திகதி தனது இறுதிப் பயணத்தை மேற்கொண்டார், செய்திகளை அச்சிட்டு வெளியிடுவதுடன் பத்திரிகையின் பணி முடிவடைந்து விடுவதில்லை: வெளியிடும் செய்தியின் விளைவுகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும் என்ற கொள்கையுடன் பத்திரிகையில் பணியாற்றியவர் அமரர் காமினி நவரட்ணா என்பது அவரை அறிந்தவர்கள் அறிந்ததாகும்,

நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த இவரைச் சென்ற வருடம் கொழும்பில் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. மெலிந்த தோற்றமுடைய இவரது உடல் நிலை இனம் காண முடியாதளவுக்கு பாதிக்கப்பட்டிருந்தது அப்போது. 'ராவய' இதழின் ஆசிரியர் விக்டர் ஐவனுடன் சென்றதனால் அவர் தான் அறிமுகம் செய்து வைத்தார்,

என்னை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்திரிகையாளன் என்று அறிந்ததும் எப்படி யாழ்ப்பாணம் இருக்கிறது? 1983 ஐப் போலவா இராணுவம் இப்போதும் நடந்து கொள்கிறது? இந்த யுத்தம் முடிவுக்கு வருவதை இராணுவத்தினர் விரும்புகின்றனரா? என்றெல்லாம் கேள்விக்கணை தொடுத்தார். இராணுவத்தினரால் மட்டும் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து விட முடியாது என்று உதடுகளைச் சுழித்தபடி அவரது வார்த்தைகள் வெளிப்பட்டன.

1982 முதல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்பட்ட Saturday Review—ன் ஆசிரிய பீடத்தினர் 1983 ஜூலையை அடுத்த நாட்களில் நெருக்கடிக்கு உள்ளாகி நாட்டிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். அந்த வேளையில் இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்று 1985 ஆகஸ்ட்டில் யாழ்ப்பாணம் வந்த காமினி நவரட்ண 1987ன் இறுதிப் பகுதி வரை யாழ்ப்பாணத்திலேயே வாழ்ந்து வந்தார். தமிழ் மக்களின் அபிலாசைகளை எதிரொலிக்கும் வகையில் ஆங்கில மொழியில் எழுதிய சிங்களவர்களில் காமினி நவரட்ணாவுக்கு தனிச் சிறப்புண்டு. இந்த மண்ணின் மக்களுடன் இனத்துவ முரண்பாடுகள் உச்சம் பெற்றிருந்த காலத்தில் வாழ்ந்தவர் என்பதே அதுவாகும்.

பத்திரிகை ஆசிரியர் என்ற எல்லைக்குள் மட்டும் அவரது பணி மட்டுப்படுத்தப்பட்டு நிற்கவில்லை என்பதால் வரலாற்றின் எங்காவது ஒரு மூலையிலாயினும் அவரது பெயர் பதிக்கப்படும் என்று நம்பலாம். அச்சம் ஊட்டுகின்ற சூழ்நிலைகளுக்கு மத்தியிலும். எறிகணைகளின் வீச்சு எல்லைக்குள் வாழ்ந்தபடியே பத்திரிகையை வெளியிட்ட அவரது துணிவு சாதாரண பத்திரிகையாளர்களுக்கு வராது. எங்கோ தொலைவிலிருந்து கொண்டு எறிகணைச் சத்தம் கேட்டது, உலங்குவானூர்திகள் ஓடித் திரிகின்றன, அம்புலன்சுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்ற அடிப்படைகளை வைத்துக் கொண்டு ஊகச் செய்திகளை வெளியிடும் பத்திரிகையாளர்கள் மத்தியில் காமினி நவரட்ணா வித்தியாசமானவர் அவரது இயல்பான பழக்கங்களால் வெறுப்பவர்கள் கூட துணிச்சலைப் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

# தெறிப்புகள்

- பெரும்பான்மை இன மக்களின் வெறும் வாயளவுப் பேச்சுக்களுக்கு சிறுபான்மைத் தலைவர்கள் ஊதுகுழல்களாக இருக்கத் தேவையில்லை.

  — மருதூர்க்கனி, முஸ்லிம் காங்கிரஸ் துணைத்தலைவர்

- தென்னிலங்கையின் அரசியல் அட்டவணையை பிரபாகரனே தீர்மானிக்கு நிலைதான் தொடருகிறது.

  — அநுரா பண்டாரநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்

- நேர்மையான மனிதர் ஒருவரை மொத்த விற்பனவுக் கூட்டுத்தாபனத்துக்கு நியமித்தேன். ஆனால் அவர் மிகுந்த ஊழல் பேர்வழியாகி விட்டார். அப்படியானால் விலைவாசி உயர்வுகளை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?

  திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க. பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது கவலை தெரிவிப்பு

இவ்வார சிறுகதை

# இரவல்

— யசோதரன்



அதிகாலையின் அமைதியைக் குலைத்துக் கொண்டு பார்வதி மாமியின் அழுகை ஒலி பலமாக ஒலித்தது.

> இஞ்சை இருந்தால் ஆமிப் பிரச்சனை .. அது, இது எண்டு பெடியளும் இயக்கத்தில் போய்ச் சேர்ந்தாலும் பிரச்சனை. இது களெண்டாலும் உழைச்சு பட்ட கடனையும் அழிச்சு பெட்டையையும் கரை சேர்க்கட்டுக்கும் எண்டு அனுப்பினம். ஆனா எல்லாக் கணக்கும் பிழைச்சுப் போச்சு.

'என்ரை ராசா என்னை விட்டிட்டுப் போட்டியளே இனி நான் என்ன செய்யப் போறன் ' இரவு கந்தையா மாமா இறந்து போன நேரம் தொடக்கம் இதையே திரும்பத் திரும்ப சொல்லி அழுது கொண்டிருக்கிறாள்.

பொல பொலவென உதிர்க்கின்ற கண்ணீரையும், சிவந்து வீங்கிப் போன முகத்தையும் பார்க்கும் போது பாவமாக இருந்தது.

'மாமி ராத்திரித் தொடக்கம் நீங்கள் ஒண்டும் குடிக்க மாட்டாள் எண்டிட்டியள் — இப்பவெண்டாலும் கொஞ்சமாய் இந்தத் தேத்தண்ணியைக் குடியுங்கோ —' பக்கத்து வீட்டு கிளாக்கரின் மகள் தேநீரை அவள் முன் நீட்டினாள்,

'ஐயோ ... எனக்கு ஒண்டும் வேண்டாம் .. ,மாமி தேநீரை வாங்கிக் குடிக்க மறுத்தாள்.

'இல்லை மாமி கொஞ்சமெண்டாலும் குடியுங்கோ — அப்பதான் எப்பன் தெம்பாக இருக்கும் ' தேநீரைக் குடிக்கச் சொல்லி அவள் மீண்டும் வற்புறுத்தினாள்,

'என்ரை நிலமை தெரியாமல் சொல்லுறியளே ..' மாமி தேநீரை வாங்காது அழுதாள்.

'ராத்திரித் தொடக்கம் வாய் மூடாமல் அழுது கொண்டிருக்கிறாய் — கொஞ்சமெண்டாலும் ஆறியிரன் ...' விதானையார் பெண்சாதி அக்கறையோடு சொன்னார்.

'நான் எப்படி ஆறியிருக்கிறது என்ரை ராசா என்னை நிர்க்கதியாக விட்டிட்டுப் போவாரெண்டு நான் நினைக்கேல்லையே இனி என்னால என்ன செய்ய முடியும். எப்பிடி நிலமையைச் சமாளிக்கப் போறன் ... ஐயோ — நேற்றுப் பின்னேரம் கூட சுகமாய்த் தானே இருந்தியள். அதுக்கிடையில் உங்களுக்குக் காலன் வந்தவனே ' பார்வதி மாமி உச்ச சுருதியில் கத்தினாள்.

'பிறந்தவை ஒரு நாளைக்கு சாகிறது இயற்கை தானே — இனியென்ன எல்லாம் நடந்து முடிஞ்சு பேச்சு — அழுதாப் பேர்லை செத்தவர் உயிரோடை எழும்பவே போறார். நீ கொஞ்சம் எண்டாலும் மனசை ஆத்து பார்வதி ,விதானையார் பெண்சாதி ஆறுதல் கூறினாள்.

ஒரு இளம் பெண் தனது கணவன் இறந்தால் கூட இப்படி அழமாட்டாள். இத்தனை வயதாகியும் மாமி மாமா மீது வைத்திருக்கின்ற அன்பின் வெளிப்பாடே இதுவென எல்லோரும் எண்ணி வியந்தார்கள்.

,ஒ — என்ன இருந்தாலும் கந்தையா ஓவசியர் பார்வதியை நல்லாய்த் தானே வைச்சிருந்தவர். இந்த வீட்டுக்கு அவை குடி வந்து இருபது வருஷமிருக்கும் அவை இரண்டு பேரும் கதை வழிப்பட்டதை நான் எண்டா ஒரு நாளும் காணேல்லை.' விதானையார் பெண்சாதி தனக்குப் பக்கத்தில் இருந்த ஒருவருக்கு கூறிக் கொண்டிருந்தாள்,

விதானையார் பெண்சாதி, எக்கவுண்டன் மனிசி, மணியகாரன் பெண்சாதி, கிளாக்கரின் மனுஷி — இப்படி அந்தக் கிராமத்தில் உள்ள பணக்காரர் என்ற பெயரோடு வாழுகின்ற வீட்டுப்பெண்கள் எல்லோரும் செத்த வீட்டில் — கொஞ்சம் வசதியான வீடுகளில் நடக்கும் இப்படியான இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் மட்டும் தான் எல்லோரையும் இப்பிடி ஒரு இடத்தில் காணலாம். பணம், பதவி, இருந்தால், இல்லாத சொந்தங்களும், அறிமுகங்களும், பிணைப்புக்களும் தானாகவே அவர்களிடம் உருவாகிக் கொள்ளும்.

நேரம் வேகமாக நழுவிக் கொண்டிருந்தது, 'பிள்ளைகளுக்கு அறிவிக்க வேணும். ரேடியோவுக்கும், பேப்பருக்கும் மரண 'அறிவித்தல் குடுக்க வேணும்' அங்கிருந்த ஒருவர் அவசரப்படுத்திக் கொண்டிருந்தார் 'மாமிக்கு என்ன குறைச்சல் —— ஒரு மகன் அமெரிக்காவில டொக்டராக இருக்கிறான். மற்றவன் கனடாவில எஞ்சினியருக்குப் படிக்கிறான். மற்றவன் ஜேர்மனியில, கடைக்குட்டி போன மாதம் தான் சவுதிக்கு போனவன். இனி இருக்கிறது ஒரு பெட்டை தானே. அவளையும் இந்தியாவுக்கு படிக்க அனுப்பியிருக்கிறா,

ஒ —— அவளுக்கும் எக்கச்சக்கமாய் சேர்த்தும் வைச்சிருப்பா —' அங்கே இருந்த ஒருத்தி மாமியின் வீட்டு வசதியைப் பற்றி பெரிதாக சொல்லிக் கொண்டிருந்தாள்.

'அப்ப பிள்ளையள் வரும் வரையும் சவம் எடுக்காமல் வைச்சிருப்பினமோ '

'பின்னை — பிள்ளையளின்ரை மறுமொழி தெரியாமல் நாங்கள் எப்படி எடுக்கிறது. தவிர இத்தனை வருடமாய் தகப்பனைப் பார்க்காததுகள் .... கடைசியா இந்த உடலையெண்டாலும் ஒருக்கா வந்து பார்த்தால் ஆறுதலாக இருக்கும்... —'

'அதெண்டால் மெய்தான் —'

'இப்ப வெளிநாட்டிலை இருந்து வாறதெண்டாலும் பிரச்சினையில்லை. உடனே வந்திடலாம். ஆனா கொழும்பில இருந்து யாழ்ப்பாணம் வாறது தானே பெரிய பிரச்சினையாய் கிடக்கு ...'

ஓ ... நிலமை வரவர மோசமாய்போய்க்கொண்டிருக்குது, இனிமேல் நாங்கள் நிம்மதியாக வாழ முடியாது. அங்கை தான் இருக்கேலாது எண்டு பார்த்தால், அட அறுவான்கள் எங்கட மண்ணில கூட நிம்மதியாக இருக்க விடுறாங்களில்லையே ...'

செத்த வீட்டிற்கு வந்திருந்த ஆண்கள் நாட்டில் இன்று நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் பற்றி சுவாரசியமாகப் பேசிக் கொண்டார்கள்.

ஒன்று கூடி ஊர்ப் புதினங்கள் பற்றிப் பேசிக் கொள்ள இதுகள் தானே நல்ல சந்தர்ப்பம்.

'பார்வதி தாலிக்கொடியை எடுத்துக் கழுத்தில போடு மோனை. சவம் இருக்கும் வரையும் போட்டிருக்க வேணும் ...'

விதானையார் பெண்சாதி காதுக்குள் மெதுவாக கிசுகிசுத்தாள்.

தாலிக்கொடி என்ற சொல்லை கேட்டதுமே மாமி தலையில் அடித்துக்கொண்டு பலமாக அழுதாள்.

இனித் தாலிக்கொடி போட முடியாது என்ற நினைப்பில், பூவையும் பொட்டையும் இழந்து விதவையாகிப் போனனே என்ற வேதனையில் அழுகிறாள் என்று தான் எல்லோரும் எண்ணிக் கொண்டனர்.

' நான்கு நாட்கள் விரைந்து சென்றது. பார்வதி 'மாமியும் அழுது அழுது சோர்ந்து ஓய்ந்து போய் விட்டாள். சவம் எடுப்பதற்கு எல்லாவித ஒழுங்கும் செய்த நிலையில், பிள்ளைகளின் வரவை எதிர் பார்த்து நின்றார்கள். அமெரிக்காவில் இருக்கும் மூத்த மகன், 'நான் எப்படியும் வருவேன் —— பிரேதம் எடுக்க வேண்டாம்' என்று அறிவித்திருந்தார். கனடாவில் இருப்பவர் இறுதிப் பரீட்சை நெருங்குவதால் வர முடியாது என்றும், 'ஜெர்மனியில இருப்பவர்... 'நான் உவ்விடம் வருவது சாத்தியமில்லை என்றும்' தெரிவித்து இருந்தனர். மற்றவர்களிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.

நாளை காலை பத்துமணி வரையும் பார்த்து விட்டுப் பிறகு எடுக்கவேண்டியதுதான் தீர்மானம் எடுக்கப்பட்டு விட்டது, கந்தையா நாலு பெடியளைப் பெத்து வளத்தும் என்ன பிரயோசனம். கடைசி நேரத்தில சவத்தைப் பார்க்கவோ... — கொள்ளி வைக்கவோ கூட ஒரு பிள்ளையும் இல்லை' அங்கு இருந்த ஒருவர் வேதனைப்பட்டார்.

கந்தையருக்கு மட்டுமில்லை இப்ப இஞ்ச இருக்சிறவையில மூக்க வாசிப் பேருக்கும் இது தான நிலமை" வேறு ஒருவர் அலுததுக் கொண்டார்,

'நேரம் பதினொரு மணியைத் தாண்டிவிட்டது' இனியும் பாாத்துக் கொண்டிருக்கேலாது, போய் குருக்களைக் கூட்டியாங்கோ" நெருங்கிய உறவினர் முறையான ஒருவர் அவசரப்படுத்தினார்.

மறுநிமிடம் குருக்கள் வரவழைக்கப்பட்டார். கந்தையாவுக்கு கொள்ளி வைக்க மகன் முறையான ஒருவர் தயாராக்கப்பட்டார்.

இதுகளைப் பார்க்கப் பார்க்க பார்வதி மாமிக்குப் பத்திக்கொண்டு வந்தது.

'கஷ்டப்பட்டுப் பெத்து வளத்தும் ஒரு பிள்ளையாலயும் ஒரு பயனும் இல்லையே — பெத்த பிள்ளையள் இருக்கத்தக்கதாய் கொள்ளி வைக்கவும் இரவல் தேட வேண்டிக் கிடக்கே ,

'டேய் குமார் நீதான் டொக்டராய் நல்ல வசதியாய் இருக்கிறாய் உனக்கு கூட வர முடியாமல் பேச்சோ — இந்த நாலு நாளைக்கும் உள்ளயும் வர உனக்கு ஏலாமல் போச்சோ மற்றதுகள் வாறதுக்குத் தான் வசதிப்படேலை ... கையில மடியில காசும் இருக்குது தோ — எட நீயும் எங்களை ஒரேடி

> மற்றவை எங்களைப் பெரிசாக நினைக்க வேணும் எண்டதுக்காக உள்ளது எல்லாத்தையும் மறைச்சு மறைச்சு போலி வேஷம் போட்டம். இப்ப இருக்கிற நிலைமையைப் பாருங்கோ. குடியிருக்கிற வீடு இரவல் போட்டிக்கிற கொடி கூட இரவல் கொள்ளி வைக்கப் போற பெடியனும் இரவல் ..
>
> இப்பிடி எல்லாமே இரவலாய்ப் போச்சே எண்ட கவலையில் தான் நான் வேதனைப் படுறன் எண்டதைக் கூட வெளியில் சொல்லேலாமல்...

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தெளிவான நிலைப்பாடின்றி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

## சுனில் அபயவர்தன

கொழும்பு பல்கலைக்கழக அரசியல் துறை விரிவுரையாளராகக் கடமையாற்றுபவர் அபயவர்தன. இலங்கையில் இனங்களுக்கு இடையிலான அரசியல் பிரச்சினைகளை நீதியான முறையில் ஆராய்ந்து வரும் இவர், இது தொடர்பாகப் பல கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டு வருகின்றார். தெளிவான நிலைப்பாடுகளில்லாமல் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட முடியாது என்பதை வெளிப்படுத்தும் அவரது கட்டுரைகளில் ஒன்று சென்ற இதழில் வெளியிடப்பட்டது. அதன் மிகுதிப் பகுதியை இங்கே தருகின்றோம்.

— ஆ—ர்

மூன்றாவது அரசியல் சக்தி ஒன்று தான் ஒரு மாற்று வழியாகும். இந்த நாட்டில் உள்ள நல்ல சக்திகளைத் திரட்டுவதுடன் அந்தச் சக்திக்கு ஒரு தேசிய ஆளுமை இருக்க வேண்டும்; தேசிய உணர்வு இருக்க வேண்டும்,

இந்த சக்தியில் இணைந்து கொள்பவர்கள் இன்று நிலவுகின்ற அரசியல் அழுத்தத்தை உணர்ந்து கொண்டு சவால்களுக்கு முகம் கொடுத்து நடைபோட மூன் வரவேண்டும். அவர்கள் தமது தகுதியை வெளிப்படுத்துவதுடன் சொந்த நலனுக்கு அப்பால் தேசிய நலனில் நாட்டத்தை வளர்த்து பணியாற்ற வேண்டும். அல்லாவிட்டால் மூன்றாவது சக்தி இந்த நாட்டின் வலுவுள்ள அமைப்பாக வளர முடியாது.

வரலாற்றை மாற்றியமைக்கக் கூடிய சமூக இயக்கங்கள், எமது அமைப்பிலே ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். பழைய சிந்தனைகளின் அடிப்படையிலே புதிய விழுமியங்கள் மலரமுடியாது, பழைய அமைப்பின் கைதிகளாக விளங்கும் புத்திஜீவிகளின் மத்தியில் இருந்து புதிய தலைமைத்துவம் மலர முடியாது. எனவே புதிய மட்டங்களில் இருந்து ஒரு புதிய பார்வை தோன்ற வேண்டும்.

இனவாத அரசியல் இன்றைய அரசியலுக்கு நலந்தராது. 21 ஆம் நூற்றாண்டை நோக்கி நடையிலும் சமூகத்தில் இனவாத அரசியலிற்கு இடமில்லை, இன்றைய தொழில்நுட்ப உலகிலே பழைய பத்தாம் பசலித் தலைவர்கள் கீழ்த்தரமான இனவாத உணர்வுகளைக் கிளறிவிட முயலலாம். அது நமக்குக் கேடு தரும் துர்ப்பாக்கிய நிலை புது யுகத்தை நோக்கி விரைந்து பயணம் செய்யும் நாம் பழைய மரபுகளை பேணப் போகின்றோமா அல்லது புது யுகம் படைக்கப்போகிறோமா என்பதை தீர்மானிக்க வேண்டும் பழையன கழிவதால், புதியன புகுவதால் அது வெறும் கற்பனைகளாக அன்றி, யதார்த்த வெளிப்பாடாக இருக்க வேண்டும்.

எமது பிராந்தியத்திலே எம்மிலும் மோசமான நிலையில் இருந்த நாடுகள் பல தமது எதிர்பார்ப்புகளை விஞ்சிய நிலையில் பொருளாதார முன்னேற்றத்தை அடைந்துள்ளன. 20 ஆண்டிற்கு அண்ணளவாக ஒரே கட்சி ஆட்சி செய்து இருப்பினும் கூட அடிப்படை வாய்ப்புகள் கூட நமது மக்களுக்குக் கிட்டவில்லை. அந்த கால கட்டத்தை எண்ணிப் பார்க்கும் போது இழப்புகளே அனேகம்,

இன்றைய அரசை எடை போடுவதனால் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்; அரசியல் யாப்பு அல்லது அதிகாரப் பகிர்வு மட்டுமே அபிவிருத்தியை அல்லது முன்னேற்றத்தைத் தரமாட்டாது. அத்துடன் சேவை ஆற்றவேண்டும் என்ற துடிப்பு இலட்சியத்தை அடைய வேண்டும் என்ற வேட்கை ஆகியனவும் இணைய வேண்டும். மக்களை ஊக்குவிப்பதுடன் முதலீடு செய்வதற்குரிய சூழலை உருவாக்க வேண்டும். தொழிலாளா, வர்த்தகர், அரசாங்கம் ஆகியன இணைந்து நாட்டு நலனுக்கு புதிய பார்வையுடன் தொழிற்படும் சூழ்நிலை உருவாக வேண்டும்.

அரசியல் செயற்பாடு நாட்டு நிர்வாகத்தை தெரிவு செய்ய வேண்டுமானால் தெரிவு முறைகளிலே மாற்றங்கள் வேண்டும், அப்போது தான் தெரிவு செய்யபபடுவோர் ஆக்கபூர்வமாக செயற்படுவர்,

அரசியல் தெரிவு முறை உயரிய நிலைக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். அரசியல் செயற்பாட்டில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுது தான் திறமை, நேர்மை உள்ளவர்களை அரசியல் கவர்ந்திழுக்கும். அல்லாவிட்டால் அரசியலிலே மாற்றம் ஏற்படாது. ஏனைய பல நாடுகளைப் போல் இந்த நாட்டு மக்களும் நம்பிக்கை என்ற ஒளியை அணையாது காக்க வேண்டும். அது தான் மாற்றத்திற்கு இட்டுச் செல்லும். மக்களிடையே காணப்படும் சிறப்புச் சீரிய மரபுகள் தான் அந்த சமூகத்தை உயர் நிலைக்கு இட்டுச் செல்லும், என்பதை மறுக்கக் கூடாது

டட்லி சேனநாயக்க யுகத்தைக் காண விரும்பும் ஐக்கிய தேசிய கட்சியினர் ஜனநாயகம் அபிவிருத்தி, நாகரிகம் பேணும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் தம்மிடையே பின்வரும் கேள்விகளை எழுப்ப வேண்டும். நாம் அரசியலில் இருப்பது நாம் நலம் பெறவா? அல்லது நாட்டை மக்களை வளம் பெறச் செய்யவா?

எமது நாட்டின் முன்னைய தலைவர்கள் அவர்கள் வலது சாரிகளாக இருந்தாலும் சரி அல்லது இடது சாரிகளாக இருந்தாலும் சரி தமது கொள்கை அடிப்படையிலே அரசியலை நடத்தினார் அவர்கள் யாரும் சுயநலத்திற்கு முதன்மை கொடுக்கவில்லை. பொருளாதார மேம்பாட்டிற்காக அவர்கள் உதவிகளைப் பெற்றிருந்தால் அல்லது உதவிகளை செய்திருந்தால் அவர்கள் இழிவாகக் கணிக்கப்பட்டிருப்பார்கள்,

சமூகம் நற்பண்பு இழந்த அதே வேளைகளிலே தலைவர்கள் ஒழுக்கத்தை இழந்து விட்டார்கள், இதைப் பார்க்கும் போது 'டொளனிங் தெரு ஆண்டுகள்' என்ற மார்க்கிரட் தச்சர் எழுதிய நூல் ஞாபகத்திற்கு வருகின்றது. அதிலே அவர் என்ன சொல்லி இருக்கின்றார் என்று தெரியுமா?, 'அரசியலிலே ஒருவரின் பங்களிப்பு என்ன என்பதை வைத்துத்தான் அவர் கணிக்கப்படுகின்றார், ஆனால், வியாபாரத்திலோ அவர் பெறும் லாபத்தை வைத்துத்தான் அவருடைய திறமை கணிக்கப்படுகின்றது' இப்படி அவர் விளக்கியுள்ளார்.

பதவியில் இருக்கும் பொழுது ஒருவர் செல்வத்தைச் சேர்ப்பானானால் அது சாதாரண நடை முறை என்று நம்பப்படுகிறது, இது எவ்வளவு மோசமான நிலை. ஊழல் ஒரு சிறிய பங்கினருக்கு நிச்சயமான லாபத்தைத் தரலாம், ஆனால் பெரும்பாலானோர்க்கு அதிக செலவீனத்தைத் தரும்,

சரிபிழை என்பதற்கு இடையிலானகோடு தெளிவற்று காணப்படுகின்றது. கடந்த ஐம்பதாண்டு காலமாக ஊழலுக்கு அநாதரவான மக்கள் இரையாகி வருகின்றார்கள், இந்த துர்ப்பாக்கிய நிலை இன்று தொடர்கின்றது,

இத்தகு மோசமான சமூக அமைப்பின் அடிப்படையில் சக்தி வாய்ந்த மனச்சாட்சி இருப்பது என்பது நாம் படிக்கும் பாடம் ஆகும்.

மாற்றம் ஒரு பிரயாணமாக அமையும் அது ஒரு கோட்பாட்டை விதந்துரைக்கும் மாநாடாக, ஒரு நிர்வாக இயக்குனர் வட்டமாகவோ அமையாது எம்மிடம் கோட்பாடுகளை விளக்கும் சாசனங்கள் இல்லை. ஆசிய பிராந்தியத்தில் நிகழ்ந்துள்ள முன்னேற்றமே எமது வழிகாட்டியாகும்

இலாபத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்ட அமைப்பிலே நாம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமா? பொதுவுடைமை நல்ல பண்புகளை மீறுகின்ற அதே வேளையிலே சுதந்திர வர்த்தக முதலாளித்துவம் இலாபத்தை முதன்மையாகக் கொண்டிருப்பதால் மனித மேம்பாட்டிற்கு முரணாகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி கையாண்ட மரபு ரீதியான கொள்கைகள், 'சந்தைக்கு எது நல்லது என்று தெரியும்' என்ற சிந்தனை உரிய பலனைத் தரவில்லை. றோன் கே. கல்பிரைட் சொன்னது போல் 'பொருளாதார சக்திகள் மக்கள் நலனுக்கு ஏற்ப இயங்குவதில்லை சக்தி வாய்ந்தவர்களுக்கே நலம் தருபவை ஆகும்' 'இது நாம் கடந்த காலங்களில் கற்ற படிப்பினை மேம்பாடு ஏனைய வழிகள் வறியவர்களுக்கு இருக்கின்ற அதே வேளையில் சம வாய்ப்புகளுக்கான சூழ்நிலை சமூகத்தில் உருவாக்கப்பட வேண்டும்

குறுகிய காலத்தில் பணக்காரன் ஆகலாம் என்ற உணர்வு சென்ற அரசாங்க காலத்தில் வளர்க்கப்பட்டதால் கஷ்டப்படாமல் முனனுக்கு வரலாம் என்ற உணர்வு உருவாகியது சூதாட்ட நிலையங்களை அமைத்ததன் மூலம் இந்த நிலை உருவாகியது சூதாட்ட நிலையங்கள் தேசிய நலனை வளர்க்க உதவவில்லை யதார்த்த நிலைக்கு மாறான பொய்மையான நம்பிக்கையை மக்கள் இடத்தே உருவாக்க சூதாட்ட நிலையங்கள் உதவும் பல குடும்பங்கள் இதனாலே பாதிப்பு அடைகின்றன. அரசாங்கம் இதை ஒரு பெரிய பாதிப்பாக கருதாமல் சூதாட்ட நிலையங்களை அனுமதிக்கிறது. ஏன் சட்ட பூர்வமாக்கின்றது மனித, பௌதீக வளங்கள் எப்படி நிர்வகிக்கப்படுகின்றது என்பதும் முக்கியம் வாய்ந்தது உள்ளூர் வர்த்தக நிலையங்கள் பல் தேசிய வர்த்தக நிறுவனங்களாக வளர வேண்டும் கல்வி சீர்திருத்தங்கள் பற்றி பெரிதாகப் பேசப்படுகின்றன எமது நாட்டிற்கு உகந்த கல்வித்திட்டத்தை எம்மால் உருவாக்க முடியவில்லை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அரச சார்பற்ற நிறுவனங்களும் சமூகமும்

புதுடில்லியைச் சேர்ந்த பத்தி எழுத்தாளரான பாரத் புகுன்புகுன்வாலா என்பவரால் எழுதப்பட்ட கட்டுரையொன்றின் சுருக்கம்.

மொழியாக்கம்.-
துரை. சுப்பிரமணியன்

தற்பொழுது அரச சார்பற்ற நிறுவனம் ஒரு சமூகத்தின் முழுமையான பகுதியாகக் கருதப்படுகிறது. தன்னலம் கருதாது மக்களுக்காகவே செயற்படுவதாகக் கூறும் இந்த நிறுவனங்களால் வீராவேசத்துடன் செயற்பட முனையும் அரசியற் கட்சிகளை அடக்கி வைக்க முடியும் என்றே ஊகிக்கப்படுகிறது அரசாங்கத்தின அடாவடித்தனங்களை கட்டுப்படுத்தும் ஒரு காப்பரணாகவும் இவை கருதப்படுகிறன. எனினும் இந்தக் கருதுகோள்கள் சரியானவைதானா? இல்லை, அவ்வாறாகச் சிந்திப்பதற்கு அடிப்படைகள் உண்டா? எல்லா நிறுவனங்களிலும் அரசியற் கட்சிகளின் பிரச்சினைகள் இயல்பாகவே இருக்கத்தான் செய்கிறது என்பதும் மறுக்க முடியாததே,

''அரசியல் வாதிகள் என்பவர்கள் சுயநலவாதிகள், ஆனால், அரச சார்பற்ற நிறுவனங்களோ சுயநலமற்றவை' என்ற கருத்தின் அடிப்படையில தான் அரச சார்பற்ற நிறுவனங்களின் வெற்றி வாய்ப்பு பெரும்பாலும் தங்கியுள்ளது, ஆனால் ''சுயநலமின்மை'' என்பதன் உண்மைப் பொருள் என்ன? அவ்வாறாயின் இவர்களுக்கு ஆசை அவா என்பவை இல்லையா உண்மை அப்படியல்ல, நாம் பொறுப்பேற்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்குள்ளும் 'ஆசை ''அவா'' என்பன இருக்கத் தான் செய்கிறது,

சமயம் பரப்பும் ஊழியர்கள் வறியவர்களுக்கு உதவுகிறார்கள். ஏனெனில் அவர்கள் கடவுளிடம் செல்லும் ஆசையைக் கொண்டிருப்பதனால் ஆகும், ஒரு மத தலைவுக்கும், குற்றவாளிக்கும் (criminal) ஆசைகளில் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் ஆசைகள் இருப்பது இயல்பு.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அயல்நாடுகளில் கவலை; ஆடும் நாற்காலி பிரதமர் வாஜ்பேய்க்கு சோதனை..?

சென்ற வாரம் குழப்பத்திலிருந்த இந்திய அரசியல் இந்த வாரம் ஓரளவு முடிவுக்கு வந்திருக்கின்றது. ஜெயலலிதாவின் பிடிவாதம் தளர்ந்து அவரது தற்காலிக மனமாற்றத்தினால் வாஜ்பேய் பிரதமராக ஆட்சியில் அமர வழிபிறந்திருக்கிறது. அவரது புதிய அமைச்சரவை 19ம் திகதி பதவி ஏற்றுக்கொண்டது.

பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்குபெறுவதற்கு பத்து நாள் அவகாசம் ஜனாதிபதியால் கொடுக்கப்பட்டிருந்தாலும் - அந்த முதல் பரீட்சையில் வாஜ்பேய் வெற்றி பெறுவர் என்றே நம்பப்படுகின்றது.

545 அங்கத்தவர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் 264 பாரதிய ஜனதா கூட்டணி அங்கத்தவர்கள் இருக்கிறார்கள், அறுதிப்பெரும் பான்மைக்கு இன்னும் பத்து அங்கத்தவர்கள் தேவைப்படும் நிலையில் வாஜ்பேய் பிரதமராகி ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் தெலுங்கு தேச கட்சியின் எம்பீக்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்ற ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் அறிவிப்பு பாரதிய ஜனதா கட்சி வட்டாரங்களுக்கு ஆறுதல் அளிக்கும் செய்தியாகும். ஆனால் டெல்லி ஐக்கிய முன்னணி வட்டாரத்தில் அதிருப்தியையே ஏற்படுத்தியிருக்கிறது.

ஐக்கிய முன்னணி வழிகாட்டக் குழு தலைவராக இருந்து தன்னிச்சையாக இந்த முடிவை நாயுடு எடுத்திருக்கிறார் என்ற குற்றம் சாட்டப்படுகின்றது. ஐக்கிய முன்னணி தலைவர்களுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்பதும் அவர் மீது அடுத்த குற்றச்சாட்டு. நம்பிக்கை கோரும் வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிப்பதென பெரும்பாலான ஐக்கிய முன்னணித் தலைவர்கள் தீர்மானித்திருக்கும் இவ்வேளையில் நாயுடுவின் இந்த அறிவிப்பு டெல்லி அரசியலில் பல திருப்பங்களை ஏற்படுத்தும் என்பது அரசியல் அவதானிகளின் கருத்து.

ஆந்திர முதல்வர் நாயுடு டெல்லியில் ஏற்பட்டிருக்கும் இந்த சலசலப்பைக் கண்டு கவலைப்பட்டதாக தெரியவில்லை. டெல்லியில் தலைவராக தொடர்ந்து இருப்பதற்கு ஆந்திராவில் தனது இருக்கையை பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் அவர் இருக்கிறார்.

சோனியா காந்தியின் வருகைக்கு பின் ஆந்திராவில் காங்கிரஸ் கட்சிப்பலம் பெற்றிருப்பதை சமீபத்திய தேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்தியிருக்கின்றன. இது நாயுடுவுக்கு ஏற்பட்டிருக்கும் பெரிய நெருக்கடியாகும். ஐக்கிய முன்னணித் தலைவர்களின் விருப்பத்தின் பேரில் காங்கிரஸ் கட்சியை மத்தியில் ஆட்சி அமைக்கவிட்டால் ஆந்திராவில் தனது நாற்காலிக்கு ஏற்படக் காத்திருக்கும் ஆபத்தைத்தடுத்து நிறுத்த முடியாது. ஆகவே ஏதாவது ஒரு விதத்தில் பாரதிய ஜனதா ஆட்சிக்கு முண்டு கொடுப்பதுற்கேநாயுடு விரும்புகிறார் தனது கட்சியையும் - தனது நலனையும் பாதுகாப்பதற்கு பாரதீய ஜனதா ஆட்சியைமறைமுகமாக ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் நாயுடு இருக்கிறார். ஐக்கிய முன்னணியின் கூடாரத்திற்குள் நடக்கும் முரண்பாடுகள் பாரதீயஜனதா ஆட்சிக்கு பாராளுமன்றத்தில் நீடித்த ஆயுளை கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

காங்கிரஸ் கட்சியில் இருக்கும் பதவிருசிகண்ட சில தலைவர்கள் சோனியா காந்தியை முன்னிறுத்தி மத்தியில் ஆட்சியை கைப்பற்றலாம் என்ற கணக்கு பொய்த்து விட்டது. காங்கிரஸ் ஆட்சி |உரிமைகோரவில்லை என்ற முடிவை ஜனாதிபதிக்கு அறிவித்து தான் ஒரு நேர்மையான அரசியல் நடத்தவே வந்திருப்பதாக சோனியா காந்தி சுட்டிக்காட்டியிருக்கிறார். நேரு குடும்பத்தின் அரசியல் பின்னணியில் இருந்து வந்திருக்கும் அவர் தான ஒரு சிறந்த பெண்மணியாக நடந்துகொள்வதோடு கணவர் ராஜீவ்காந்தியின் பெயரையும் காப்பாற்ற வேண்டியவராகவும் இருக்கிறார். பிழையான அரசியலுக்கு வழிகாட்ட நினைக்கும் ஆமாம் சாமி தலைவர்களை சோனியா காந்தி எட்டவைப்பது அவரது அரசியல் எதிர்காலத்திற்கு நல்லது என்றே நம்பலாம்.

நீண்ட கால அரசியல் - நிர்வாக அனுபவம் வாய்ந்த பழுத்த அரசியல் வாதியான வாஜ்பேய் இந்திய பிரதமராக வந்திருப்பதை அண்டை நாடுகளான பாகிஸ்தானும், சிறிலங்காவும் ஒரு எச்சரிக்கை உணர்வுடன் அவதானித்துக் கொண்டிருக்கின்றன.

காஸ்மீர், இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை அவர் எப்படி கையாளப்போகிறார் என்பது தான் அந்த நாடுகளுக்கு இருக்கும் கவலை.

ஏனென்றால், கடந்த காலங்களில் இந்தியாவின் ஸ்திரத்தன்மைக்கும் - அதன் நலன்களுக்கும் எதிரான பல சம்பவங்கள் இந்த இரு நாட்டில் இருந்து நடந்து முடிந்திருப்பதால் இந்தியா தனது வெளிநாட்டுக் கொள்கையில் புதிய அணுகுமுறையை கடைப்பிடிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும், நிலையான ஆட்சி இருந்தாலே எதையும் சாதிக்க முடியும். இந்திய பிரதமர் வாஜ்பேய்க்கு இன்றுள்ள முதல் கவலை எப்படி இந்த கூட்டணி ஆட்சியை ஐந்து வருடங்கள் இழுத்துச் செல்வது என்பது தான். ஏனென்றால் கடந்த காலங்களில் கூட்டணி ஆட்சிகள் அற்ப ஆயுசுடன் முடிந்தது நினைவில் கொள்ள வேண்டிய சங்கதிகளாகும்.

# பேச்சுக்களை மீண்டும் தொடக்க ஜெரி அடம்ஸ் - பிளேயர் முயற்சி

"இது நடக்கக்கூடிய விடயமா என்பதல்ல இப்போதுள்ள கேள்வி எப்போது நடக்கும் என்பதுதான்.'' இவ்வாறு கூறியுள்ளார் அயரிஷ். குடியரசு இராணுவத்தின் தலைவர் ஜெரி அடம்ஸ். அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்ட அவர் பிரிட்டனுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுமா என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அயரிஷ் பகுதியில் இடம் பெற்ற இரு கொலைகளுடன் அயரிஷ் குடியரசு இராணுவமானது பொலிசாரால் தொடர்புபடுத்தப்பட்டதையடுத்து அதன் அரசியல் பிரிவான சின்பெய்ன் பதினெட்டு தினங்களுக்கு பேச்சுவார்த்தையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பேச்சுவார்த்தை மேசையிலிருந்து விலகியிருப்பதை எப்போதும் முதன்மைப்படுத்தப் போவதில்லை எனக் கூறும் ஜெரி அடம்ஸ், பிரிட்டனின் ரொனி பிளேயர் அரசுடனான பேச்சுவார்த்தைகள் சமத்துவம் தான் அடிப்படையானது எனக் கருதுகிறார். மறுதலையாக இணக்கப்பாடோ அல்லது உடன்பாடோ அல்ல எனவும் குறிப்பிடுகிறார். எனினும் சமாதான முயற்சிகள் தொடரப்படவேண்டும் என்கிறார்.

மே மாதத்திற்கு முன்பாக நகல் வரைவு பூர்த்தி செய்யப்படாது விட்டால் மாறுநிலைக் காலம் ஒன்றை அமுல்படுத்தும் யோசனையை வெளியிட்டுள்ள அவர் எப்படியாயினும் பேச்சுவார்த்தை முன்னேற்றப்படல் வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளார்.

இதே வேளை அயரிஷ் குடியரசு இராணுவத்தின் அரசியல் பிரிவான சின்பெய்ன் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசிய பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் கருத்து வெளியிடுகையில், ''நாங்கள் இணக்கப்பாட்டின் நகல் வரைபுகளை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கிறோம்'' என்றார் அத்துடன் ஜெரி அடம்ஸின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும், சின்பெய்ன் அரசியல் பேச்சுக்களில் பங்குபற்ற வேண்டியது அவசியம் எனவும் பிளேயர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் மீண்டும் சின்பெய்ன் பேச்சுவார்த்தைக்கு வருவதனால் வன்முறைகளுக்கு இடமுண்டு என்று பிரிட்டிஷ் ஐக்கிய ஆதரவாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

## சிறிலங்காவிற்கு இராணுவப் பயிற்சி பாக். வழங்குவதற்கு இணக்கம்

சிறிலங்காவுக்கான இராணுவ மற்றும் பயிற்சி வசதிகளை அதிகமாக்குவதற்கு பாகிஸ்தான் இணங்கியிருப்பதாக நம்பகரமாகத் தெரியவருகிறது. சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அண்மையில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்தபோது இதற்கான உறுதிமொழி பெறப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அரசாங்க உயர் பீடத்திலிருந்து அங்கீகாரம் பெறப்பட்டதும், உயர் மட்ட பாதுகாப்புக் குழுவொன்று பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து இதன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய தயாராகவுள்ளதாக முத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (சி)

# அரசியலில் சூப்பர் ஸ்டாரின் மௌனம் கலையுமா....?

சினிமாவையும் அரசியலையும் தனது வளர்ச்சிக்காக எம். ஜி. ஆர். எப்படி பயன்படுத்தினார் என்னும் பாடத்தை ரஜனி அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ரஜனி ஒரு குரல் கொடுத்தால் ஆயிரம் - ஆயிரம் மன்றங்களும், லட்சக்கணக்கான ரசிகர்களும் அணிதிரளக் காத்திருக்கிறார்கள். ஆனால் ஏதோ ஒரு அவநம்பிக்கை அவர் உள் மனதில் மறைந்திருக்கிறது. அரசியலில் தலைமை தாங்குவது தன்னால் சாத்தியமாகுமா? என்னும் கேள்விக்கு விடை கண்டு பிடிக்க முடியாத அப்பாவியாக இருக்கிறார்.

தமிழ் நாட்டில் சினிமா வேறு அரசியல் வேறு என்ற கருத்தை பொய்யாக்கி இரண்டும் ஒன்று தான் என்று நிருபித்தவர் எம்.ஜி.ஆர். அவர் வழி வந்த ஜெயலலிதாவும் ஒரு முறை முதல் அமைச்சர் ஆகியிருக்கிறார். மீண்டும் வருவதற்கு முயற்சி செய்கிறார்.

இந்த ஆபத்தை தடுத்து நிறுத்துவதற்கு ஒன்றில் ரஜனி அவர்கள் தனிக்கட்சி ஆரம்பிக்க வேண்டும். அல்லது தனக்கு தோதான கட்சி ஒன்றை தெரிவு செய்து அதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இல்லையேல், தமிழ் நாட்டு அரசியலில் மீண்டும் மையங்கொண்டுள்ள ஜெயலலிதா என்னும் புயல் சின்னம் ரஜனியின் அமைதி வாழ்க்கையை சின்னாபின்னமாக்கி விடும் என்பதை அவர் மறக்கக்கூடாது.

தமிழ் சினிமா ரசிகர்களால் சூப்பர் ஸ்டார் என்று அழைக்கப்படும் ரஜனி அவர்கள் எதிர் காலத்தில் தமிழ் நாட்டு அரசியலில் தனிக்கட்சி ஆரம்பித்து அவரது ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்வாரா அல்லது சினிமாவோடு நிறுத்திக் கொள்வாரா என்பதை அவர் தெளிவுபடுத்தும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஏனென்றால்,

கடந்த காலங்களில் ரஜனி அவர்கள் பட்டும்படாமல் அரசியல் பேசி கருணாநிதி-மூப்பனார் அரசியல் கூட்டணிக்கு ஆதரவு அளித்து வந்தார் என்பது யாவரும் அறிந்ததே. இருப்பினும் நடந்து முடிந்த இந்திய பாராளுமன்றத் தேர்தலில் அவர் வழமை போல் ஆதரித்த கருணாநிதி-மூப்பனார் கூட்டணி ஜெயலலிதாவால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. அவரின் பரம விரோதியான ஜெயலலிதா மீண்டும் அரசியலில் மறு பிரவேசம் செய்திருப்பது ஆபத்தான அறிகுறியாகும்.

சினிமாவில் ரஜனி அவர்கள் முடிசூடா மன்னனாக திகழ்ந்தாலும் அரசியலில் அவர் கற்றுக்குட்டியாகவேஇருக்கிறார். காலம் தாழ்த்தி எடுக்கும் அரசியல் முடிவுகளால் தானும் பாதிக்கப்பட்டு தன்னை நம்பியிருந்தவர்களின் தோல்விக்கும் காரணமாகி விடுகிறார். சமீபத்தில் நடந்த தேர்தலில் கருணாநிதி - மூப்பனார் கட்சி கூட்டணிக்கு தனது ஆதரவை கடைசி நேரத்தில் அறிவித்து தனது ரசிகர்களையும் - மக்களையும் குழம்பி விட்டார். ஆகவே இத்தோல்விக்கு ரஜனி அவர்களும் பொறுப்பேற்கவேண்டும்.

தமிழ் நாட்டில் ஜெயலலிதா மீண்டும் முதல் அமைச்சராக வந்தால் பாதிக்கப்படப் போகும் முதல் ஆள் ரஜனியாகத்தான் இருக்கும், ஒரே தெருவில் (போயஸ் கார்டன் வீதி) குடியிருக்கும் இரு துருவங்களும் அரசியலில் மோதிக் கொள்ளும் காலத்தை அவரது ரசிகர்களும் - மக்களும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்

# அநாவசியமாய்க் குலைந்த அமைதி

## — மறுமலர்ச்சி சினிமா பற்றி ரசனைக் குறிப்பு —

ஒரு சிறு சம்பவம் எப்படி போதல்களாக வெடித்து இரண்டு கிராம மக்களின் அமைதியை சீர் குலைக்கின்றது என்பதை மம்மூட்டியை முன்னிறுத்தி - அவரை நம்பியே இப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது.

இப்படத்தின் டைரக்டர் கதையை உருவாக்குவதில் கொஞ்சம் கஷ்டப்பட்டிருக்கிறார் அந்த விதத்தில் இந்தப் படம் சற்று நிறை வைத் தருகின்றது. டைரக்டருக்கு பாராட்டுகள்.

செல்வாக்கு மிக்க ஒரு கிராமத் தலைவன் (மம்முட்டி) தனது வேலைக்காரனுடன் அடுத்த கிராமத்திற்கு ஒரு வேலையாகச் செல்கிறார்.

திரும்பி வரும் வழியில் அந்த கிராமத்து பெண்ணால் தான் செய்யாத குற்றத்திற்காக அந்த கிராமத்து தலைவனால் மரத்தில் கட்டி வைத்து அடிக்கப்பட்டு தண்டிக்கப்படுகிறார்.

நடந்த சம்பவத்தை தனது கிராமத்தில் சொல்லக்கூடாது என்று தனது வேலைக்காரனிடம் மம்மூட்டி சத்தியம் வாங்குகிறார்.

— சோமா —

பின்பு உண்மை தெரிந்து செய்யாத குற்றத்திற்காக தண்டித்து விட்டேனே என்று மனம் வருந்திய அந்த கிராமத்து தலைவன் அன்றிரவே மம்மூட்டியிடம் வந்து மன்னிப்பு கேட்கிறார். மம்முட்டியும் பெருந் தன்மையுடன் மன்னித்து வழி அனுப்பி வைக்கிறார்.

மம்முட்டியிடம் அன்பும் - மரியாதையும் வைத்திருக்கும் வேலைக்காரன் இதை அறியாது அன்றிரவே தனது கிராமத்து ஆட்களை திரட்டிக் கொண்டு அந்த கிராமத்தை நெருப்பு வைத்து கொளுத்துகிறான். இதன் விளைவு, பல பேர் இறக்கிறார்கள். கிராமம் முற்றாக எரிந்து சாம்பலாகிறது,

மன்னிப்பு கேட்டும் இப்படி அநியாயம் செய்து விட்டானே என்று மம்முட்டி மீது ஆத்திரப்படும் அடுத்த கிராமத்து தலைவனும் அவனது ஆட்களும் கொதித்து எழுகிறார்கள், இரண்டு கிராமத்திற்கு இடையில் ஏற்படும் மோதல்களை படத்தின் முடிவு வரை டைரக்டர் கொண்டு செல்கிறார்.

மம்மூட்டியின் அமைதியான தோற்றம் - அவரது நடிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மூளையில்லாத

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியாக சில நாட்கள் நரியின் தந்திரத்திற்கு சிறு மிருகங்கள் பலியானது, நாளடைவில் தமது இனத்தின் எண்ணிக்கை குறைவதை அவதானித்த சிறு மிருகங்கள் குள்ள நரியின் கபட நாடகத்தை அறிந்து வேற்றிடம் தேடி தப்பிச் சென்று விட்டன,

சிங்கத்திற்கு இரைதேடி காட்டின் நாலா பக்கமும் நரி அலைந்து திரிந்தது. சிங்கத்திற்கு இரை கொண்டு போகா விட்டால் நான் தான் இரையாக வேண்டும் என்று நரி பயத்தால் நடுங்கியது, அந்த நேரத்தில் கழுதை ஒன்று புல் மேய்ந்து கொண்டிருப்பதை அவதானித்த நரி துள்ளி எழுந்து காலாற நடப்பதற்கு கழுதையின் அருகில் சென்று பேச்சை கொடுத்தது,

அப்படியே சிங்கத்தின் இடத்திற்கு கழுதையை அழைத்துச் சென்றது,

கடும் பசியுடன் இருந்த சிங்கம் கழுதைமேல் பாய்ந்தது. சிங்கத்தின் குறி தவற கழுதை திமிறிக் கொண்டு தப்பி ஓடியது.

தனது பாய்ச்சல் தவறியதால் சினம் கொண்ட சிங்கம் கோபத்துடன் நரியை பார்த்து முறைத்தது.

எண்ணடா வம்பா போச்சு என்று மனதிற்குள் புலம்பிக் கொண்டு நரி கழுதையிடம் ஓடோடிச் சென்று அதை தடுத்து நிறுத்தி —— சமாதானம் பேசி மீண்டும் சிங்கதிடம் அழைத்து வந்தது. இம்முறை சிங்கத்தின் பாய்ச்சல் தப்பவில்லை. கழுதை சிங்கத்திற்கு இரையானது. கடும் பசியுடன் இருந்த சிங்கம மிச்சம் மிகுதி வைக்காமல் கழுதை தலையை மட்டும தவித்து சாப்பிட்டு முடித்தது, கழுதை இறைச்சி உண்ட மயக்கத்தில் சிங்கம் நித்திரையானது.

இந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்தி கழுதையின் தலைக்குள் இருக்கும் மூளையை நரி சாப்பிட்டு தனது பசியை போக்கியது,

நித்திரை விட்டு எழுந்த சிங்கம் கழுதையின் தலையை சாப்பிடத் தொடங்கியது, கழுதையின் தலைக்குள் மூளை இல்லாததைக் கண்ட சிங்கம் —— சற்று கோபத்துடன்

என்ன நரியாரே! கழுதையின் தலைக்குள் மூளையை காணவில்லை, எங்கே? என்று கேட்டது.

நரியார் தான் பசியுடன் இருப்பது போல் பாசாங்கு செய்வதற்காக கொட்டாவி விட்டுக் கொண்டு —— மிகுந்த பணிவுடன்,

சிங்கராஜாவே! கழுதைக்கு மூளை இருந்தால் உங்களால் தாக்கப்பட்டு ஓடின கழுதை மீண்டும் திரும்ப வந்திருக்குமா! என்று நரி வெறுப்புடன் பதில் சொன்னது.

சிங்கமும் நரியின் சாதுர்யமான பேச்சை நம்பி அமைதியானது, அது உண்மையாக இருக்கும் எமது தனது மனதிற்குள் யோசிக்கலானது.

## அரச ..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே கேள்வி என்னவெனில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆசைக்கும், அரசியல்வாதிகளின் ஆசைக்கும் வித்தியாசம் உண்டா? அடிப்படையில் இருபகுதியினருமே பாராட்டை விரும்புபவர்கள் தான். இல்லையேல் அவர்கள் ஏன் ஸ்தாபனங்களை உருவாக்க வேண்டும்? ஸ்தாபனம் = அதிகாரம்,

இந்த அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் தாங்கள் மக்களுக்குச் சேவை செய்வதாகக் கூறிக் கொள்கின்றன, அரசியல்வாதிகளும் கூட தாமும் மக்களுக்குச் ''சேவை' செய்வதாகத் தான் கூறிக்கொள்கிறார்கள், எனவே உண்மையில் இவைகளை வேறுபடுத்திக் காட்ட ஒன்றுமே இல்லை,

எனினும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்குவதிலும், அரச நிறுவனங்களின் மெத்தனப போக்குகளை வெளிப்படுத்துவதிலும், அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னணிப் பாத்திரம் வகிக்க முயல்கின்றது. ஆனால் அடிப்படைப் பிரச்சனை என்னவெனில அநேகமான நிறுவனங்கள் இயல்பாகவே ஐயத்திற்கு இடமானவை. ஒரு ஐயத்திற்குரிய நிறுவனத்தினால் இன்னுமொரு ஊழலுள்ளதெனக் குற்றம் சாட்டப்படும் நிறுவனத்தைக் கட்டுப்படுத்துவது சாத்தியமானதல்ல.

இருந்த போதிலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடு சமுகத்தில் மிகவும் வேண்டப்படுவதாகவே இருக்கின்றது. சூழல் மாசுபடுதல் பற்றி மக்களை அறிவுறுத்தவும் போதைய பொருட்களின் பாவனைகளைக் கட்டுப்படுத்தவும் உள்ளூர் கால்நடைகளைப் பெருக்கவும் - நல்ல முறையில் சிறந்த பாடவிதானங்களை பாடசாலைகளுக்கு அமைத்துக் கொடுக்கவும்- அரச சார்பற்ற நிறுவனங்களால் முயற்சிகள் மேற்கொள்ள முடியும். அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவை ஒருவகையில் அரசாங்கத்தின் விஸ்தரிப்பே. அதனையே குறிக்கோளாகக் கொண்டு முயற்சிகள் மேற்கொள்வதே பயன் பொருத்தமானதாக இருக்கமுடியும். □

## இரவல்

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

யாய் உதைச்சுப் போட்டியே —'

'மூத்த பிள்ளையள் இரண்டையும் வெளிநாட்டுக்கு மேல் படிப்புக்கு அனுப்பினம். அதுகள் எங்களை மறந்திட்டுதுகள். உழைச்ச ஒரு சதமும் தான் எங்களுக்குத் தரேல்லை எண்டு பாத்தால் கடைசியாய் தகப்பன்ரை கடமை செய்யவும், பாரிக்கவும் குடுத்து வைக்கேல்லையே'

,மூத்ததுகள் தங்கடை விருப்பத்தில் வெளிநாடு போச்சுதுகள், மற்றதுகளை நாங்களெல்லே கட்டாயப் படுத்தி அனுப்ப வேண்டியதாய்ப் போச்சு'

இஞ்சை இருந்தால் ஆமிப் பிரச்சனை அது. இது எண்டு பெடியளும் இயக்கத்தில போய்ச் சேர்ந்தாலும் பிரச்சனை இதுகளெண்டாலும் உழைச்சுபட்ட சடனையும் அழிச்சு பெட்டையையும் கரை சேர்க்கட்டும் எண்டு அனுப்பினம். ஆனா எல்லாக்கணக்கும் பிழைச்சுப் போச்சு, ஜெர்பனிக்குப் போனவன் அகதி முகாமிலை அவதிப்படுறானாம். இருந்த வெறும் காணியையும் பிள்ளையளை வெளிநாட்டுக்கு அனுப்ப வெண்டு வித்து முடிஞ்சுது. நகை நட்டுக்களும் போச்சு கடைசியை வெளியில அனுப்ப வெளிக்கிட்டு, ஏஜென்சிக்காரன் ஏமாத்தி சவுதியில கொண்டுபோய் விட்டிருக்கிறான்.

இஞ்சை உள்ளவை எல்லாம் நான் அழுகிறது அவனின்ரை கவலையில எண்டு தான் நினைப்பினம், என்ரை வீட்டுக் கவலையளை எவனெண்டு வெளியில சொல்லி அழ முடியும். ,பார்வதி மாமி தனக்குத் தானே சொல்லிக் கொண்டார். மற்றவை எங்களைப் பெரிசாக நினைக்க வேணும் எண்டதுக்காக உள்ளது எல்லாத்தையும் மறைச்சு மறைச்சு போலி வேஷம் போட்டம்,

இப்ப இருக்கிற நிலமையைப் பாருங்கோ, குடியிருக்கிற வீடு இரவல் போட்டிருக்கிற கொடி கூட இரவல் — கொள்ளி வைக்கப்போற பெடியனும் இரவல்

இப்பிடி எல்லாமே இரவலாய்ப் போச்சே என்ட கவலையில தான் நான் வேதனைப்படுறேன் எண்டதைக் கூட வெளியில சொல்லேலாமல் — — □

## தெளிவான...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலத்திற்கு உகந்ததாக எமது கல்வித்திட்டம் வளரவில்லை மாணவர்கள் இடத்தே தேவையற்ற அழுத்தம் திணிக்கப்படுகின்றது எமது தேவைக்கு ஏற்ற பெறுபேறுகள் கிடைக்கவில்லை

புதிய தொழிற்சாலைகளும், அதிக வர்த்தக நிறுவனங்களும் ஆரம்பிக்கப்படுகின்றன அதேவேளையில் அவை லாபம் தருபவையாகவும் நிர்வகிக்சப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் உணர வேண்டும்

பொருளாதார அபிவிருத்தி ஒரு திட்டமிட்ட முறையிலே ஒரு சம அடிப்படையிலே நடை பெறவில்லை சென்ற தேர்தலிலே பேசப்பட்ட மனித நலன் பேணப்படுமானால் சுகாதாரம் கல்வி சமய அபிவிருத்தி துறைகளிலே அரச செலவீனம் அதிகரித்திருகக வேண்டும் அல்லவா? இதை நாம் இப்போது காணக்கூடியதாக இல்லை

மக்கல் முகம் கொடுக்கின்ற சவால்களைப் பற்றி சிந்தித்துச் செயலாற்ற தேசிய ரீதியில் முயல வேண்டும் அந்த திட்டங்களை செவ்வனே அமுலாக்க மக்கள் ஆதரவைத் திரட்டி ஒரு குறித்த காலக் கெடுவை நிர்ணயித்து நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

தமது தேவைகளை ஒரு நாடு பூர்த்தி செய்கின்றது என்ற நம்பிக்கையை வளர்த்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் அப்பொழுது தான் ஒரு வலுவுள்ள ஒரு தேசிய இனம் உருவாகும்,

கட்சி நலனை தேசிய நலனிலும் பார்க்க முக்கியமாகக் கருதப்படும் மனோபாவம் எமது நாட்டின் துர்ப்பாக்கியம் என்று அன்று எஸ். டபிள்யூ. பண்டாரநாயக்கா சொன்ன கூற்று அன்றையதிலும் பார்க்க இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் பொருத்தமாக உள்ளது.

அதிகாரத்தைப் பிடிக்க நிகழும் முடிவற்ற முயற்சியிலும் பார்க்க எமது நாட்டின் அரசியல் கட்சிகள் நாட்டின் பிரச்சினைகளுக்கு நடைமுறை ரீதியில்; தீர்வினைக்காண மக்களும் அரசியல் கட்சிகளும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என நான் நம்புகின்றேன்.

எங்கே போகிறோம் என்பதை அறியாமல் எமது இலக்கை எப்படி அடைவது என்பதை அறியாமல் நாம் திணறிக் கொண்டு இருக்கின்றோம், சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் உருண்டு ஓடிய பின்னரும் நாம் திணறிக் கொண்டு இருக்கின்றோம். நாம் ஒரு புதிய பாதையை ஆரம்பிக்க வேண்டாமா? □

# காலைக்கதிர்

தபாற்பெட்டி எண் : 145, யாழ்ப்பாணம்.

ஒளி : 01 27 - 03 - 1998 கதிர் : 04


## பாதுகாப்பு....!

எங்களைத் தொழிலுக்கு வரவேண்டாம் என்றனர்!

ஏனென்று கேட்டோப்? பாதுகாப்புக்காக எனச் சொன்னார்கள்.

குடியிருந்த இடத்தைவிட்டு வெளியேறுக என்றனர்!

ஏனென்று கேட்டோம்? பாதுகாப்புக்காக எனச் சொன்னார்கள்,

எங்களது தொழில், குடியிருப்பு எப்படி பாதுகாப்புக்கு குந்தகமாயிற்று

என்பதைக் கேட்டோம்? சொல்வதற்கு மறுத்தனர்

ஏனென்று கேட்டோம்? பாதுகாப்புக்காக!

பாலத்தீனியர் ஒருவர் சில வருடங்களுக்கு முன்பாக இஸ்ரேலியப் படையினரின் நடவடிக்கைகள் தொடர்பாகக் குறிப்பிட்ட விமர்சனம்தான் மேலே தரப்பட்டுள்ளதாகும்.

இருந்தும் இந்த விமர்சனக் குறிப்பு எமது மக்களுக்கும் நாட்டுக்கும் பொருத்தமானது போலத் தென்படும் நிலைமை இன்று நேற்று எற்பட்டது அல்ல.

இனப் பிரச்சினையும், அதனால் ஏற்பட்டிருக்கும் போரும் தீவிரம் பெற்றிருக்கும் நிலையில் எவரது பாதுகாப்பையும், எவரும் உறுதிப்படுத்த முடியாத சூழல் தோன்றியிருப்பது எமது மக்களுக்கு புதிய தொரு அனுபவமல்ல.

பாதுகாப்பின்மை - பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படாத சூழல் என்பன சந்தேகம் தோன்றுவதற்கு அடிப்படைச் காரணமாகின்றது.

சந்தேகக் கண்ணுடனான பார்வையிலிருந்து தப்புவதற்காகப் பொதுமக்கள் சங்கடப்பட வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

இத்தகைய சந்தேகப் பார்வையின் ஒரு கட்ட வெளிப்பாடுதான் கிழக்கிலிருந்து வாகனங்கள் கொழும்புக்கு செல்வதைக் கட்டுப்படுத்தியது. கட்டுப்பாடுகள் - தடையுத்தரவுகள் திடீர் திடீரென அமுலாக்கப்படுவது தமிழ் மக்களுக்குப் புதிய அனுபவமாக இருக்காது. வட பகுதியில் குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து வெளியே வரவும் - உள்ளே புகவும் படையினா விதித்திருக்கும் கட்டுப்பாடுகள் இப்போதும் அமுலில் இருப்பது இரகசியமானதல்ல. வன்னியிலிருந்து வரும் வாகனங்கள் வவுனியாவைத் தாண்டமுடியாமல் இருப்பது இன்று வரை அமுலில் உள்ள நடைமுறை. அசம்பாவிதங்கள் இடம்பெறுவதைக் காரணம்காட்டி சந்தேகப் பார்வையை மக்கள் மீது படரவிடுவது அரசின் மீது நம்பிக்கையைக் கட்டி வளர்க்க முயல்வோருக்கு ஆப்பு வைப்பதாகி விடலாம்.

அதேவேளை அரசாங்கத்தின் பலத்த கட்டுக்காவல்களையும் மீறி சம்பவங்கள் இடம்பெற்றுவிடும் போது ஊடுருவிச் செல்பவர்களின் தற்கொடை உணர்வுகளும், பொது மக்கள் அனுபவிக்கும் சங்கடங்களும், கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

அதாவது டழிக்குப் பழி, இரத்தத்திற்கு இரத்தம் என்ற பழிவாங்கும் மனப் பாங்கிலிருந்து விடுதலைபெற்று இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு நிலை நாட்டப்படும்போது தான் ஐயத்திற்கிடமின்றி அனைவரது பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுமென்று நம்பலாம்.

# எதிரிக்கட்சியாகும் எதிர்க்கட்சியும் ஆளும் தரப்பின் சங்கடமும்

இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க அரசிற்கு எதிராக தனது போராட்டங்களை முடுக்கி விட்டுள்ளது. "அரசின் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராகவும் மக்களுக்கு ஏற்படும் பொருளாதாரச் சுமைகளுக்கு எதிராகவும் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடத்தயாராகி விட்டார்கள்", என்கிறார் ஐ.தே.க தலைவர் ரணில விக்கிரம சிங்க.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என பேசிக்கொண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராக பெரும் யுத்தத்தை நடாத்திக் கொண்டு - அதனை முடிவுக்கும் கொண்டு வர முடியாத நிலை இடை நிறுத்தவும் முடியாத நிலை - அதன் மறு விளைவுகளாக தென்னிலங்கையில் தொடர் குண்டு வெடிப்புகளுக்கு களம் அமைத்துக் கொடுத்து விட்டு இன்னது செய்வது என்று புரியாத நிலையில் உள்ள அரசுக்கு ஐ.தே.க வின் போராட்டம் இன்னமும் அரசை திணறடிக்கும் என நம்பலாம்.

ஓரிரு வாரங்களுக்கு முன்பாக ஐ.தே.க வினர் காலியில் அரசின் ஊழல் மோசடிகளுக்கு எதிராக மாபெரும் கையெழுத்துப் போராட்டம் நடாத்தியிருந்தனர்.

கடந்த 18ந் திகதி விகாரமாதேவி பூங்காவில் சத்தியாகிரகம் ஒன்றையும் பின்னர் எதிர்ப்பு பேரணி ஒன்றையும் நடாத்தி முடித்துள்ளனர்.

தற்போதய அரசு ஊழல்களிலும் மோசடிகளிலும் ஈடுபட்டுள்ளது. அடாவடித்தனங்களிலும் இறங்கியுள்ளது இவற்றை நிறுத்தி மீண்டும் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவற்கு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கே இந்த நடவடிக்கை என்கிறது "சிறிகோத்தா" வட்டாரம்

"நேர்மையான மனிதர் ஒருவரை கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் தலைவராக நியமித்தேன் ஆனால் சில காலத்திற்குள்ளேயே அவர் ஊழல் பேர் வழியாக மாறி விட்டார். கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம், கூட்டுறவுச் சங்கக் கடைகள் என்பவற்றில் ஊழல் மலிந்துள்ள இந்நிலையில் பொருட்களின் விலைகள் குறையும் என்றோ அல்லது வாழ்க்கைச் செலவு குறையும் என்றோ எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

"மின்சார சபையைச்சேர்ந்த உயரதிகாரி ஒருவர் இரண்டு மில்லியன் ரூபா பெறுமதியான வீடொன்றை கொழும்பில் வாங்கியுள்ளார். ஆனால் அவரது பெற்றோர்கள் கிராமத்தில் குடிசை வீட்டில் தான் வசிக்கின்றார்கள் அரிசியின் விலையைக் குறைக்க வேண்டுமானால் நெல் சந்தைப் படுத்தும் சபையைக் கலைக்க வேண்டும்"

இவ்வாறெல்லாம் குறிப்பிட்டிருப்பவர் எதிர்த்தரப்பு பாராளுமன்ற உறுப்பினரும் அல்ல, எதிர்க்கட்சித் தலைவரும் அல்ல. அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் குறைகூறும் அதிருப்தியாளரும் அல்ல, ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களே தான்.

இருப்பினும் யாரை யார் விமர்சிப்பது? யாருக்கு போராட்ட நேர்மையீனம் உள்ளது? இரண்டுமே சிங்களப் பேரினவாதக் குட்டையில் ஊறிய மட்டைகள் என்கிறார் யாழ் வாசி ஒருவர்.

அன்றைய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஆட்சி அதிகா

**அன்பன்**

ரத்தை கைப்பற்ற பண்டா-செல்வா ஒப்பந்தத்தை கருவியாகப் பயன்படுத்தினார். இவ் ஒப்பந்தத்தை எதிர்த்து மாபெரும் சத்தியாக்கிரகம் நடாத்தி அதனைக் கிழித்தெறிந்து ஆட்சியுரிமையையும் கைப்பற்றினார். இப்பேரணியில் 80,000 பேர்வரை கலந்து கொண்டனர்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற பேரணிக்கு 50,000 பேர் வரையில் எதிர்பார்க்கப்பட்ட போதும் சுமார் 10,000 பேர் வரையே பங்கு கொண்டனர்.

அரசின ஜனநாயக விரோத செயல்களை கண்டித்தும் பொருளாதார சுமைகளை எதிர்த்து பேரணியினர் கோஷங்கள் எழுமபியும் சுலோக அட்டைளையும் தாங்கியிருந்தனர். இவர்களில் பலர் வீதி மறியலிலும் ஈடுபட்டிருந்தனர், இதனால் போக்கு வரத்து ஸதம்பிதமடைந்தது. இதில் பொலிஸாருக்கும் பேரணியினருக்கும் இடையில் சிறு கைகலப்புகளும் நிகழ்ந்தேறின,

இது தவிர புத்தளத்தில் இருந்து பேரணியில் கலந்து கொள்ள வந்த ஐ.தே.க ஆதரவாளர்கள் நீர்கொழும்பில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டனர், இவர்கள் வசமிருந்த சுலோக அட்டைகளையும் பதாகைகளையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்

மக்கள் தொடர்ந்து எம் பக்கமே உள்ளனர். 1998 இறுதியில் அல்லது 1999 ஆரம்பத்தில் நாங்கள் மீண்டும் ஆட்சி அமைப்போம் எனவும் மேலும் தெரிவிக்கிறது சிறி கோத்தா வட்டாரம்.

இது அரசியல் அதிகாரங்களை கைமாறுவதற்குரியது. மட்டுமே தவிர இலங்கைத் தீவின் எரியும் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை சுபீட்சமாக்கும் எண்ணம் எவருக்கும் இல்லை. இதனை என்று சிங்கள மக்கள் புரிந்து கொள்ளுகிறார்களோ அன்று தான் அவர்களுக்கு விடிவு எனலாம்,

## வன்னியில் மக்கள் இடப்பெயர்வு

(பேசாலை)

வன்னியில் தொடரும் இராணுவ நடவடிக்கையையடுத்து பெருமளவு மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து மன்னார் மற்றும் பேசாலைக்கு சென்ற வண்ணமுள்ளதாக அங்கிருந்து வந்தோர் தெரிவிக்கின்றனர்.

ஸ்கந்தபுரம், மல்லாவி, வவுனிக்குளம், வடகாடு போன்ற பகுதிகளிலிருந்தே மக்கள் பெருமளவில் இடம் பெயர்வதாகவும் செல் தாக்குதல்கள் அடிக்கடி நிகழ்வதாகவும் மேலும்தெரிவித்துள்ளனர். (கே)

## பொருட்களின் விலை குறைகிறதாம்

(மன்னார்)

வன்னிப் பகுதியில் மக்கள் பெருமளவில இடம் பெயர்வதனையடுத்து பாவனைப் பொருட்களின் விலைகள் பெருமளவிற்கு குறையடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கடும் வெப்பத்தின் காரணமாக சொறி, சிரங்கு, மலேரியா போன்ற நோய்களின் தாக்கமும் அதிகரிப்பதாகவும் அறியப்படுகிறது. (கே)

## தினமும் 2500 அடையாள அட்டைகள்

தேசிய ஆட்பிரிவு திணைக்களம் விரைவில் கணனி மயமாக்கப்படவுள்ளது. தற்போது திணைக்களம் நாளொன்றுக்கு 2500 அடையாள அட்டைகளையே விநியோகித்து வருகிறது.

## இளைஞர் இலக்கிய வட்டம்

யாழ் இலக்கிய வட்டத்தினர் இளைஞர் இலக்கிய வட்டம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இவ்வகையில் எழுத்துலகில் புதியதாகக் காலடி எடுத்து வைத்துள்ளவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு யாழ் இலக்கிய வட்டச் செயலாளர் விருப்பம் கொண்டுள்ளனர்.

தொடர்புகளுக்கு: புத்தொளி.
ந, சிவபாதம், செல்வ அகம்,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

# மீளக்குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்படுவதில் பாரபட்சம்?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுவதாகத் ,தெரியவருகின்றது, கடந்த டிசம்பர் மாதத்திற்கு முன்பாக சுமார் 93,000 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் குடாநாட்டில் மீளக் குடியமர்ந்துள்ள போதும் 45,000 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே மீளக் குடியமர்வு ஊக்குவிப்புப் பணம வழங்கப்பட்டுள்ளது. இதிலும் சாவகச்சேரி, பருத்தித்துறை, மருதங்கேணி, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த எவருக்கும் மீளக்குடியமர்வு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்பட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் வேலணை, ஊர்காவற்துறை போன்ற பிரதேசங்களில் பெருமளவானவர்களுக்கும் நெடுந்தீவுப் பகுதியில் அனைவருக்கும் இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது கோப்பாய்,உடுவில்,சங்கானை,சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் சுமார் அரைப்பங்கினருக்குக் கூட இக் கொடுப்பனவு இதுவரை கிடைக்கவில்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 96, 97ம் ஆண்டுகளில் மீளக்குடியமர்வு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக சுமார் 22.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது மீளக் குடியமர்வு கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில அதிகாரிகள் அரசியல்வாதிகள், மட்டத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாக பரவலாகப் புகார்கள் கூறப்படுகின்றது. (என்)

## குற்றவாளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னார்- இளம் பெண் ஒருவருடன் தகாத முறையில் நடந்து கொண்ட ஒருவர் தொடர்பான விசாரணைகள் பற்றிய வழக்கு கடந்த பதினெட்டாம் திகதியன்று யாழ்ப்பாண நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டது.

அப்போது நீதிபதி அவர்கள் குறிப்பிட்ட அரசியல் கட்சி உறுப்பினர் நன்மை செய்வதாகக் கருதி பாரதூரமான பாதிப்பை சம்பந்தப்பட்டவருக்கு ஏற்படுத்தியிருக்கின்றார் எனவும் சுட்டிக் காட்டினார். (கே)

## மக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் தடைகளும் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டாக வேண்டும்.

அண்மையில் நோர்வேயிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த கலாநிதி நா. சண்முகரட்ணம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் யாழ்ப்பாண நகரத்தையும் அதனுடன் இணைந்த பகுதிகளையும் மேலோட்டமாகப் பார்க்கும் போது இயல்பு நிலை ஓரளவுக்கு திரும்பி விட்டதாகவே எவரும் கருதக்கூடும். எனினும் உண்மையான நிலைமை அவ்வாறானதாகத் தெரியவில்லை. மயிலிட்டி, காங்கேசன்துறை, ஊறணி போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சுமார் எட்டு வருடத்திற்கும் மேலாக மாறி மாறி முகாம்களிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் நிலைமை, குருநகர், சுழிபுரம் போன்ற கிராமங்களில் மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதில் பலத்த கட்டுப்பாடுகள். தென்மராட்சிப் பகுதியில் விவசாயிகள் சுயமாக உற்பத்தியில் ஈடுபடுவதில் தலையீடுகள் எனப் பல விடயங்களை அவதானிக்கும் போது இயல்பு நிலை திரும்பியுள்ளதாகக் கூறுவது ஏற்புடையதாக இல்லை என்றார்.

இவர் காலைக்கதிருக்கு அளித்த பிரத்தியேக பேட்டியின் முழுவிபரமும் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

## தொழிற்சங்க நடவடிக்கையில் யாழ் தாதிமார் ஈடுபடார்

நாடளாவிய ரீதியில் நடைபெறுமென எதிர் பார்க்கப்படும் தாதிமார் சங்கத்தின் தொழிற்சங்கப் போராட்டத்தில் யாழ்ப்பாண வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதிமார் ஈடுபடமாட்டார்கள் எனத் தெரியவருகிறது. பதினாறு கோரிக்கைகளை சுகாதார அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ள தாதிமார் சங்கம் தமது கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைக்காத விடத்து எதிர் வரும் 31ம் திகதி முதல் சுகவீன லீவுப் போராட்டத்தையும் 17ம் திகதி முதல் பொது வேலை நிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளது (என்)

## அநாவசியமாய்க்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புக்கு உறுதுணையாக இருக்கிறது. படத்திற்கும் பலமாக அவர் நிற்கிறார். கதாநாயகி தேவயானி, நிறைவாக நடித்திருக்கின்றார்.

படத்தில் நகைச்சுவை காட்சி பெரிதாக இல்லாதநால் விறுவிறுப்பு தடைப்படுகின்றது. மம்முட்டியின் தாயாராக வரும் மனோரம்மாவின் அற்புதமான நடிப்பு- மகன் மேலும் - அந்த கிராமத்து மக்கள் மீதும் அவர் காட்டும் பரிவு பாசம் அளவிட முடியாது. தாய் பாசத்தை கொட்டி நடித்திருக்கிறார். நீண்ட இடைவெளிக்கு பிறகு மனோரம்மாவின் மறு பிரவேசம் அவருக்கு சினிமாவில் புது அத்தியாயத்தை கொடுக்கும் என்று நம்பலாம்.

இரண்டு கிராமத்து தலைவர்கள் படத்தின் இறுதியில் மோதுகிறார்கள் மம்முட்டியும் அடுத்த கிராமத்து தலைவனும், இரு மலைகள் மோதுவது போல் சண்டைக் காட்சி அமைத்திருக்கிறார்கள்

முடிவில் உண்மை தெரிந்து இருவரும் சமாதானம் அடைகிறார்கள். இரண்டு கிராமத்தின் நீண்ட நாள் பகை நீங்கி சமாதானம் ஏற்படுகின்றது.

பார்க்க வேண்டிய படம்-

## இரத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டடும் ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கை. இந்தப் போரில் விடுதலைப்புலிகள் இரண்டு விதமான உத்திகளைப் பயன்படுத்துகின்றனர். ஒன்று ஊடுருவித் தாக்குதல். மற்றது பாதுகாப்புத் தாக்குதல். எட்டு மாதங்களுக்கும் மேல் நீடித்த இந்தச் சமரில் சுமார் 1165 போராளிகள் உயிரிழந்துள்ளனர். எனவும் குறிப்பிட்டார். (ஏ)

## பிரதேச சபை உறுப்பினர் மீது தாக்குதல்

ஊர்காவற்துறை பிரதேச சபை உறுப்பினரான உருத்திரமூர்த்தி ரகு என்பவர் கடந்த செவ்வாயன்று காரைநகரில் வைத்து தாக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து ஊர்காவற்துறை பொலிஸ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது (என்)

## தேர்தலில்

1 ஆம் பக்க தொடர்ச்சி)

தேர்தல்களில் போட்டியிடுவோம் என்றும், இதுபற்றிய உத்திகளை வகுப்பதற்கான பேச்சுக்கள் தற்போது நடைபெற்று வருவதாகவும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

## குடாநாட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்ட பின்னரே வடகிழக்கு மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். இது அரசாங்கத்தின் ஆர்வத்தைப் புலப்படுத்தும் கூற்றாக அவதானிகள் கருதுகின்றனர்.

இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட சில யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட பகுதி முஸ்லிம்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவதில் முட்டுக்கட்டைகளை போடுவதாகவும் 'கூறப்படுகிறது.

# மாணவி மீது வல்லுறவு முயற்சி மல்லாகம் நீதமன்றில் விசாரணை

அராலி, வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள பாடசாலை மாணவியொருவர் கடந்த ஆண்டு நவம்பர் 7-ம் திகதியன்று படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கு கடந்த செவ்வாயன்று மல்லாகம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பத்திரிகையாளர் உட்பட எவரும் விசாரணைகளை பார்வையிட நீதிபதி அனுமதிக்கவில்லை. நீதிபதியின் அறையில் இடம்பெற்ற விசாரணையின் போது பாதிக்கப்பட்ட மாணவி சாட்சியமளித்துள்ளார்.

இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மாணவி சார்பாக சட்டத்தரணி மு. சபாநாதனும், எதிராளிகள் சார்பாக சட்டத்தரணிகள மு ராதாகிருஷ்ணன், சு. பரமராஜா, பொன் பூலோகசிங்கம் ஆகியோர் ஆஜாராகினர். (என்)

## ஆங்கில ஆசிரியா தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறுமெனக் கல்வி வலய வட்டாரங்கள தெரிவித்துள்ளன.

மேற்படி பரீட்சையை நடாத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப் பட்டுவருவதாககல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஒரு சில வாரங்களுக்கு முன்னர் கல்வி வலயங்களினால் கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் நடத்தப்படும் இப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுபவர்கள் எதிர்வரும் மே மாதத்தில் நியமனம் பெறுவர் எனவும் மேலும் கூறப்படுகிறது. (கே)

## மிதிவெடியினால் காயம்

உரும்பராய் மூன்று கோவிலடி என்னும் இடத்தில் செவ்வாயன்று மிதிவெடி யொன்று வெடித்துள்ளது. இச் சம்பவத்தில் யோகேந்திரன் ரதீஸ்குமார் என்பவர் தனது வலது கால் பாதத்தை முற்றாக இழந்துள்ளார்,

# இராணுவ உணவு விநியோகிப்பில் பல மோசடிகள் இடம் பெறுகிறதாம்

(கொழும்பு)

இராணுவத்தினருக்கான உணவு விநியோகத்தில் பல மோசடிகள் மேற் கொள்ளப் பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. வருடா வருடம் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளின் போது இது கண்டு பிடிக்கப்பட்டதாகத்தெரியவருகிறது.

இராணுவத்தினருக்குரிய உணவுப் பொருட்களின் செலவு தற்போது சுமார் அறுபது கோடி ரூபாவைத் தாண்டியுள்ளது.

இராணுவத்தினருக்கான பொருட்களில் சுமார் எண்பது சதவீகிதமானவையே வழங்கப்படுகின்றன. எஞ்சிய பொருட்களுக்கான பணம் விநியோகிக்கும் நிறுவனங்களால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றதாம்.

## புங்குடுதீவின்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்ற உத்தியோக மனப்பான்மை விழுதுவிட்டு பெருவிருட்சமாக வளர்ந்துள்ள நிலைமை. கஷ்டப்பிரதேச பாடசாலைகள் என்று முத்திரை குத்திவிடுவது தொடர்ந்து கஷ்டங்களை வழங்குவதற்குத் தானோ? என்னவோ? இந்த லட்சணத்தில் குடாநாட்டின் 'ஒரு மூலை இருக்கின்ற வேளையில் நகரப்புறத்தில் கணனிகள் என்றும் குளிரூட்டிகள் என்றும் பாடசாலைகள் அமர்க்களப்படுகின்றன.

1990க்கு முன்னர் 15 பாடசாலைகள் செயற்பட்ட புங்குடுதீவில் இப்போது 04 பாடசாலைகளே மூச்சு விடுகின்றன. இந்த நான்கு பாடசாலைக்கும் பொறுப்பாக இருந்த ஒரேயொரு ஆங்கில ஆசிரியருக்கும் அண்மையில் இடமாற்றம் வழங்கி அவரது போக்குவரத்து கஷ்டத்தை குறைத்துள்ளது திணைக்களம். ஆசிரியர்களின் இடமாற்ற விடயங்களில் அதிகாரிகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் முன்னுரிமை பெறுகின்றதோ என்ற முணுமுணுப்புக்களுக்கும் குறைவில்லை. இதே வேளை தொண்டராசிரியர்களாக நான்கு வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றிய பலருக்கும் கூட இப்பகுதியில் இதுவரை புதிய நியமனமும் இட்டவில்லையாம். இந்தத் தொண்டராசிரியர்களுக்கு கொடுப்பனவுகளும் கிடைக்கவில்லை என்பது சங்கடத்தைக் கொடுக்கும் செய்தியாகும்.

பாடசாலைகளின் அதிபர்களை சந்திக்க வேண்டுமானால் வெளிநாட்டு திணைக்களத்தால் நடத்தப்படும் கருத்தரங்குகளுக்கு சென்றால் இலகுவானதாக இருக்கும் என்று மனவேதனையுடன் குறிப்பிட்டார் இப்பகுதியில் வசிக்கும் பெற்றோர் ஒருவர். அடிப்படை அறிவைப் பெற முடியாது தவிக்கும் இத்தகைய மாணவர்களின் நலன்கள் தொடர்பாக எப்படிக் கவனம் செலுத்தப்படப் போகிறது என்பதுதான் கேள்வி எனலாம்.

இப் பத்திரிகை காலைக்கதிர் நிறுவனத்தின் சார்பாக பா. அன்பழகன் அவர்களால் 1998 மார்ச் 27 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்டது.
அச்சுப்பதிவு: முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.